பக்கங்கள் : பதினாறு


Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 31 வியாழக்கிழமை (16-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:296



சொல்ஹெய்மை வரவேற்கிறார் இளம்பரிதி

## இராணுவத்தின் நெருக்குதல்கள் குடாநாட்டில் அதிகரிக்கின்றன

### சொல்ஹெய்மிடம் இளம்பரிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.16

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரின் நெருக்குவாரங்கள் அதிகரித்துவருகின்றன. சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் வந்த நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்மிடம் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொக்குவிலில் உள்ள அரசியல்துறை அலுவலகத்தில் நடந்த சந்திப்பில் யாழ். மாவட்ட நிலைமை குறித்து இளம்பரிதி எடுத்துக்கூறினார்.

இளம்பரிதி மேலும் தெரிவித்ததாவது:-

புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்தபின் மக்கள் நிம்மதியான வாழ்க்கையை அனுபவிப்பர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மக்கள் விரக்தியின் விளிம்பில் நிற்கின்றார்கள்.

விவசாயம், கடற்றொழில் ஆகியவற்றில் ஈடுபடும் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். அவர்களின் பிரச்சினைகள் தொடர்கதையாகவே இருக்கின்றன. அவற்றுக்குத் தீர்வுகிட்டாததால் மக்கள் மனதில் விரக்திநிலை ஏற்பட்டுள்ளது. இராணுவ நெருக்குவாரங்களும் அதிகரித்துள்ளன. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சமாதான முயற்சிகளில் அவநம்பிக்கை அடைந்துள்ளனர் என்றார் இளம்பரிதி. (எ-3)

### அமைதி நடவடிக்கையில் மஹிந்தவுக்கு வெட்டு

# பிரதமர்-சொல்ஹெய்ம் சந்திப்பை திடீர் ரத்துச்செய்தார் ஜனாதிபதி

### எனினும் தனிப்பட்ட முறையில் இரகசியமாகச் சந்தித்தனர்

கொழும்பு,செப்ரெம்பர்16

**இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் சமாதான முயற்சிகளில் இருந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஒரேயடியாக வெட்டினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

**அமைதி முயற்சிகளில் அனுசரணைப் பணியாற்றும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளவிருந்த உத்தியோகபூர்வ சந்திப்பு ஜனாதிபதியின் தலையீட்டால் இரத்தானது.**

**எனினும், பின்னிரவில் - காதும் காதும் வைத்தால் போல் - உத்தியோகபூர்வமற்றவகையில் - எரிக்சொல்ஹெய்முடன் தனிப்பட்ட முறையில் இரகசியமாக நேரடிப் பேச்சு நடத்தினார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் வளர்ந்து வரும் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் முரண்பாடும், முறுகலும் நீடிப்பது பற்றிய அரசல் புரசலான செய்திகள் தொடர்ந்து வெளியாகிவருவது தெரிந்ததே.

மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பிரதமர் பதவி வழங்கப்பட்டாலும், அது தனது கட்சிச் செல்வாக்கால் அவர் பிடுங்கி எடுத்துக்கொண்ட பதவி என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

ஆக, அவருக்கு - பெயருக்கு - பெருந்தெருக்கள் அமைச்சு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதில்கூட கிழக்குப் பெருந்தெருக்கள் விவகாரம் 'பிடுங்கி' எடுக்கப்பட்டு அத்தாவுல்லாவுக்கு வழங்கப்பட்டுவிட்டது.

இந்நிலையில் பிரதமர் என்ற முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயங்களில் பங்களிக்கும் வாய்ப்பு அவருக்கு இருந்து வந்தது. எனினும், அதிலிருந்தும் அவரை வெட்டி, ஒதுக்குவதில் ஜனாதிபதி குமாரதுங்க கண்ணும் கருத்துமாக இருக்கிறார் எனக் கூறப்படுகினறது.

தற்போது இலங்கை வந்துள்ள நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதியான எரிக்சொல்ஹெய்ம், மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் என்ற முறையில் சந்தித்து அவருடன் கலந்துரையாடி, கருத்துக்களைச் செவிமடுக்க விரும்பினார். நேற்றுமுன்தினம் பிற்பகல் அதற்கான சந்திப்புக்கு ஏற்பாடாகியிருந்தது.

ஆனால், கடைசி நேரத்தில் அச்சந்திப்பில் பங்குபற்ற வேண்டாம் என்ற உத்தரவு ஜனாதிபதி தரப்பிலிருந்து பிரதமருக்குப் பறந்ததாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சந்திப்புச் சமயத்தில் கொழும்பில் இருக்க வேண்டாம் எனவும் -

வேறு எங்கோ உத்தியோகபூர்வ பணிக்குச் சென்ற இடத்தில் தாமதமாகிவிட்டது என்று கார

(16ஆம் பக்கம் பார்க்க)

## நிதித்துறையின் கல்லூரி வன்னியில் நேற்றுத் திறப்பு

நிதித்துறையின் நிதிமேலாண்மையியற் கல்லூரி கிளிநொச்சியில் நேற்றுப் புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது. நிதித்துறை மனிதவள மேம்பாட்டுப் பகுதிப் பொறுப்பாளர் சி.அன்புச்செல்வனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினைக் கணக்காய்வுப் பகுதிப் பொறுப்பாளர் மு.பாரி ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை சேரன் வாணிபப் பொறுப்பாளர் ந.இளம்பரிதி ஏற்றிவைத்தார். கல்லூரிக் கட்டடத்தினை சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் திறந்துவைக்க, செயலகத்தினை தளஅமைப்புப் பகுதிப் பொறுப்பாளர் இ.மணிமாறன் திறந்துவைத்தார். தொடர்ந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனுடனும் ஜனாதிபதியுடனும் இன்று சொல்ஹெய்ம் பேச்சு நடத்துவார்

### அதன்பின்பே அடுத்தகட்டம் தெரியும் என அவர் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.16

"சமாதான முயற்சிகளில் உள்ள தேக்க நிலை தொடர்பாக இன்று விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் நாம் பேச்சு நடத்திய பின்புதான் அடுத்த கட்டம் குறித்து அறியமுடியும்.

"எனினும், அடுத்த கட்டம் குறித்து இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும்தான் மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். நாம் அந்த வேலையைச் செய்யமுடியாது"

- நோர்வே அனுசரணைக்குழுவின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை விமானம் மூலம் பலாலி வந்தடைந்த சொல்ஹெய்ம், நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் அங்கு யாழ். மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுடன் கலந்துரையாடினர்.

யாழ். மாவட்டப் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக அவரிடம் கேட்டறிந்த சொல்ஹெய்ம் பின்னர், யாழ். விவசாய பீடத்தில் யாழ். பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

அதன்பின் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியையும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## எந்தச் சவாலையும் எதிர்கொள்ள படைகள் தயார் என்கிறார் சந்தகிரி

திருகோணமலை,செப்.16

திருகோணமலைத் துறைமுகத்திற்குப் புலிகளினால் அச்சுறுத்தல் உள்ளது என்பதை மறுக்கமுடியாது. ஆனால், எந்தச் சவாலையும் முகம்கொடுக்கக்கூடிய தயார் நிலையிலேயே படையினர் உள்ளனர்.

- இப்படிக் கூறினார் கடற்படைத் தளபதியும், முப்படைகள் மற்றும் பொலீஸாரின் சிரேஷ்ட அதிகாரியுமான வைஸ் அட்மிரல் தயா விக்கிரமகுமார சந்தகிரி.

கூட்டுப்படைகளின் தலைமையகத்தில் மேற்படி சிரேஷ்ட அதிகாரி பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி உயர் பதவியை வகிக்கும் முதல் கடற்படை அதிகாரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது. நேற்றுப் பதவியேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வுகாண முடியாது என்பதை நான் திட்டவட்டமாக ஏற்கனவே தெரிவித்துவிட்டேன். அரசியல்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் விபத்து: கொழும்பில் மரணம் சிறுமியின் சடலத்தை கையளிக்க மறுப்பு!

### அறிக்கை கேட்கிறது வைத்தியசாலை நிர்வாகம்

வவுனியா,செப்.16


புதுக்குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து கொழும்பு வைத்தியசாலையில் உயிரிழந்த சிறுமியின் சடலதை அவரது பெற்றோரிடம் கையளிப்பதற்கு கொழும்பு வைத்தியசாலை நிர்வாகம் மறுப்புத் தெரிவித்துள்ளது. விபத்துக்குறித்து ஸ்ரீலங்கா பொலீஸாரின் சான்றிதழ் கையளிக்கப்படவில்லை எனத் தெரிவித்தே இம்மறுப்புத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பகுதியில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற வீதி விபத்தில் ரம்யா சிவகுமார் (வயது-9) என்ற சிறுமி காயமடைந்தார். அங்கிருந்து யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்ட சிறுமி பின்னர் மேலதிக சிகிச்

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்







லெப்.கேணல் திலீப னின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நல்லூரில் திலீபன் நினைவுத் தூபி முன்றிலில் நேற்று ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் இளைஞரொருவர் மலரஞ்சலி செலுத்துவதையும் தேசிய எழுச்சிப்பேரவையின் யாழ்.மாவட்ட செயலாளர் சூ.சிறில் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: தீபன்)

# தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.16

இந்திய வல்லரசுக்கு எதிராக உண்ணா நோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு நாளின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று யாழ்.குடாநாட்டில் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகின.

பிரதான நிகழ்வுகள் நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபியடியில் நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் தேசியக்கொடியினை கடற்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன் ஏற்றிவைத்தார்.

பொதுச்சுடரினை யாழ்.நல்லூர் கோட்ட மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் பூமகள், மாவீரர் லெப்டினன்ட் அர்ச்சுனாவின் தந்தை சதாசிவம் ஆகியோரும் நினைவுச் சுடரினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழியும் ஏற்றிவைத்த பின்னர் அகவணக்கம் இடம்பெற்றது. தொடர்ந்து நினைவு நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரும் தியாகி திலீபனின் நினைவுத்தூபிக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

இறுதியாக யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் நடைபெற்ற அஞ்சலியுரையில் யாழ்.மாவட்ட அரசியற்றுறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் யாழ்.கல்விவலய நிர்வாக உதவியாளர் பூ.புலேந்திரராசாவும் அஞ்சலியுரைகளை நிகழ்த்தினர். (எ-13-86)

# ஜனாதிபதி விருதுகளுக்கான கைத்தொழில் போட்டிகள்

சிறிய மற்றும் கிராமியத் தொழில் அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் நடுத்தர சிறிய மற்றும் நுண்மைக் கைத்தொழில் முயற்சிக்கான ஜனாதிபதி விருது தேசிய ரீதியில் வழங்கப்படவுள்ளது. இதற்கான போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் வடமாகாண அலுவலகம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக கட்டடம், சுண்டுக்குளி என்னும் முகவரியில் விண்ணப்பப்படிவங்களை பெற்று பூர்த்திசெய்து ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

தேசிய ரீதியாக நடத்தப்படும் இப்போட்டியில் சிறந்ததாகத் தெரிவு செய்யப்பட்ட தொழில் திட்டத்திற்கு நவம்பர் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதிவரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள கைத்தொழில் கண்காட்சியில் ஜனாதிபதியால் விருது வழங்கப்படும்.

இக்கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் குடநாட்டிலுள்ள கைத தொழிலாளர்கள் 3 ஆயிரம ரூபாவினை செலுத்தி தமது பொருள்களை கண்காட்சிக்கு வைக்கமுடியும். இவை சம்பந்தமான மேலதிக விவரங்களுக்கு 222 2421 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-204)

## பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டுவந்த

# பல்கலை கல்விசாரா ஊழியர்கள் வீதிக்கு இறங்கிப் போராட முடிவு

கொழும்பு,செப்.16

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக கழக கல்விசார ஊழியர்கள் இன்று முதல் வீதியில் இறங்கிப் போராட்டம் செய்யத் தீர்மானித்துள்ளனர். அதன் முதற்கட்டமாக இன்று இசுறுபாயவில் உள்ள கல்வி அமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக கடந்த 16 தினங்களாக அனைத்துப் பல்கலைக்கழகங்களும் ஸ்தம்பித்துள்ளன.

பல்கலைக்கழகங்களில் ஆய்வுகளுக்காக வளர்க்கப்படும் மிருகங்கள் மற்றும் பிராணிகள், தாவரங்கள் போன்றவற்றை பராமரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் உழியர்களும் ஏனைய ஊழியர்களுக்கு ஆதரவு வழங்கும் பொருட்டு தமது பணியைப் பகிஷ்கரிக்கப் போகிறார்கள் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பல்கலைக்கழக கல்விசார ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் இணைச் செயலாளர் சாந்தபண்டார இவ்விடயம் குறித்துக்கூறியதாவது:-

ஊழியர்களின் கோரிக்கைக்கு உரிய தீர்வு கிட்டும்வரை எமது போராட்டத்தை நாம் கைவிடப் போவதில்லை.

இன்று திட்டமிட்டபடி பத்தரமுல்லையில் உள்ள இசுறுபாய முன்பாக ஆர்ப்பாட்டம் நடக்கும்.

இந்தப் போராட்டத்தைப் பரவலாக விஸ்தரித்துத் தொடர்வோம் - என்றார். (எ-க)

# முத்துசிவலிங்கத்துக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பதவியில் முதல் வெட்டு?

## சமூக அபிவிருத்தி அமைச்சை இழக்கின்றார்

எதிரணியிலிருந்து அரசுத்தரப்புக்கு ஆதரவாக பல்டி அடித்ததற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு வழங்கப்பட்ட ஒரேயொரு அமைச்சுப் பதவியும் வெட்டிக் குறைக்கப்படுகின்றது.

சமூக அபிவிருத்தி பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராகப் பதவியேற்ற இ.தொ.காவின பிரதிநிதியான முத்துசிவலிங்கம், சமூக அபிவிருத்தி அமைச்சுப் பொறுப்பை இழக்கின்றார். இனிமேல் அவர் வெறும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் மட்டுமே.

பிரதி அமைச்சர் என்ற முறையில் செல்லச்சாமிக்கும் தோட்ட உட்கட்டமைப்பே எஞ்சியிருக்கும்.

முத்து சிவலிங்கத்துக்கு அமைச்சர் பதவியை வழங்கியதால் முன்பு சமூக அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக இருந்த சி.பி.ரத்னாயக்க எந்த அமைச்சுப் பொறுப்பும் இல்லாமல் இருக்கின்றார்.

சமூக அபிவிருத்தி அமைச்சு அவரிடம் மீணடும் ஒப்படைக்கப்படுகின்றது. அதேசமயம் அமைச்சர் டி.எம்.ஜயரத்னவிடமிருக்கும் பல்வேறு அமைச்சுக்களில் ஒன்றான மலையக அபிவிருத்தி அமைச்சும் அவரிடமிருந்து எடுக்கப்பட்டு சி.பி.ரத்நாயக்கவுக்கு வழங்கப்படும் எனத் தெரிகின்றது.

எனவே சி.பி.ரத்னாயக்க சமூக அபிவிருத்தி மலையக அபிவிருத்தி அமைச்சராகப் பதவி வகிப்பார்.

கடந்த வெள்ளியன்று அமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்ற இ.தொ.க. பிரதிநிதி முத்துசிவலிங்கம் அந்தக் கையோடே அந்த அமைச்சை அதுவரை வகித்து வந்த சி.பி.ரத்னாயக்கவுக்குக் கூட அறிவிக்காமல் அவசர அவசரமாக அமைச்சுக்குள் புகுந்து அமர்ந்து கொண்டார் என்றும் -

இது ஆளும் தரப்புக்குள் புகைச்சலை ஏற்படுத்தியிருக்கின்றது என்றும்-கூறப்படுகின்றது.

இதனால், அமைச்சர் ரத்னாயக்க தரப்பினா தம்வசமிருந்த அமைச்சு வாகனங்களைக்கூட இன்னும் புதிய அமைச்சர் முத்துசிவலிங்கம் தரப்பினரிடம் ஒப்படைக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதில் இ.தொ.கவினர் நடந்துகொண்ட முறையால் அதிருப்தியுற்ற அரசுத் தரப்பினர் அதுகுறித்து ஜனாதிபதிக்கு முறையிட்டனர் என்றும் -

தற்போது அமைச்சுப் பொறுப்பு வெட்டிக் குறைக்கப்பட்டதன் பின்னணிக்கு இதுவும் ஒரு காரணம் என்றும் -

விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. (எ-க)

# ஓட்டோவிலிருந்து வீழ்ந்த சிறுவன் 13 நாள்களின் பின் உயிரிழப்பு!

பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றி இறக்கும் ஓட்டோவில் இருந்து தவறி வீழ்ந்ததில் த்லையில் படுகாயமடைந்து மயக்கமுற்றிருந்த சிறுவன் ஒருவன் 13 தினங்களின் பின் நேற்று அதிகாலை மரணமானான்.

யாழ். புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையில் கல்வி பயிலும் இருபாலை, கட்டப்பிராயைச் சேர்ந்த ஜோன்சன் விதுஷனன் (வயது 6) என்ற சிறுவனே இவ்வாறு அகால மரணமடைந்தான். கடந்த 2ஆம் திகதி வியாழக்கிழமை பாடசாலையில் இருந்து வீடு திரும்பும் வழியில் ஓடிக்கொண்டிருந்த ஓட்டோவில் இருந்து இந்தச் சிறுவன் திடீரெனத் தவறி தலையடிபட வீதியில் வீழ்ந்தான்

நல்லூர் சட்டநாதர் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அந்த இடத்திலேயே மயக்கமடைந்த சிறுவன் உடனடியாக யாழ்.போதனா மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டான். தலையில் பலமாக அடிபட்டதால் உள்ளே இரத்தக் கசிவு ஏற்பட்ட நிலையில் அங்கு அவனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். அங்கும் மயக்க முற்ற நிலையிலேயே சிறுவனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

சம்பவம் நடந்து 13 ஆவது நாளான நேற்று அதிகாலை சிறுவன் அங்கு உயிரிழந்தான். ஓட்டோவின் பின் ஆசனத்தில் மேலும்பல சிறுவர்களோடு ஒன்றாகக் கதவோரமாக அமர்ந்திருந்த இந்தச் சிறுவன் திடீரென வாயில் ஊடாக வெளியே வீழ்ந்துள்ளான் என்று கூறப்படுகின்றது. சந்தடி மிகுந்த நேரங்களில் பாடசாலை பிள்ளைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களை வேகமாக செலுத்துவதாலும் நன்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாத திறந்த வாகனங்களில் அளவுக்கு அதிகமாக சிறுவர்களை ஏற்றிச் செல்லுதல் போன்ற செயற்பாடுகளாலும் இது போன்ற அனர்த்தங்கள் ஏற்படுவதாக பொலீஸ் மற்றும் மருத்துவ வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது. (ஐ-15-180)

# இரத்தினபுரியில் 2 பொலீஸார் பலி!

இரத்தினபுரி கலவனைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு பொலஸார் உயிரிழந்தனர்.

இரவு நேர வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் சந்தேகத்துக்குரிய ஓட்டோ ஒன்றை நிறுத்திச் சோதனையிட முற்பட்டபோது ஓட்டோவினுள் இருந்தவர்கள் திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் எனக் கூறப்படுகின்றது.

அதனால் சம்பவ இடத்திலேயே இரு பொலீஸாரும் உயிரிழந்தனர். அவர்களில் ஒருவர் பொலீஸ் கான்ஸ்டபிள் எனவும் மற்றவர் ரிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஓட்டோவில் மூவர் வந்தனர் எனவும் அவர்கள் ஓட்டோவை அந்த இடத்திலேயே கைவிட்டு தப்பியோடியுள்ளனர் எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் இடம் பெற்றுவருவதாகவும் இரத்தினபுரி சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.(எ-க)





நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த நோர்வே சமாதான அனுசரணைக் குழுவின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், தூதரகத்தின் 2ஆவது சிரேஷ்ட செயலாளர் கிஷோரீ ட்ரொம்ஸ்ரால் ஆகியோரடங்கிய குழுவினர் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் யாழ்.பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளான த.பஞ்சலிங்கம், பீடாதிபதி பேராசிரியர் க.இராசதுரை, சீ.வி.கே.சிவஞானம் உள்ளிட்ட குழுவினரை சந்தித்துக் கலந்துரையாடுவதை முதலிரு படங்களிலும் யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.கனகலிங்கம் சொல்ஹெய்மிடம் மகஜர் கையளிப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# இழுவை வலைத் தொழில் அடுத்த ஆண்டிலிருந்து தடைசெய்யப்படும்

## நீரியல்வளத் திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.16

குருநகர் மற்றும் வல்வெட்டித்துறை கடற்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் இழுவை வலைத்தொழில் அடுத்த வருடம் முதல் தடைசெய்யப்படவுள்ளதாகக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதனைக் கருத்திற்கொண்டு இரு பிரதேசங்களையும் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு மாற்றுத் தொழில் வழங்கும் வகையில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனமும், உலக உணவு விவசாய ஸ்தாபனமும் நடவடிக்கை எடுத்துள்ளன.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் திட்டத்தின் கீழ் இரு பிரதேசங்களிலிலுமிருந்து தலா முப்பது தொழிலாளர்கள் தெரிவுசெய்யப்படுவதுடன், ஒவ்வொருவருக்கும் சுமார் ஒரு லட்சம் ரூபா நிதியினைச் சுழற்சி முறையில் கடனாக வழங்கவும் தீமானிககப்பட்டுளீளது.

இதேவேளை, குருநகர்ப் பகுதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 25 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு ஐ.நா. அபிவிருததித் திட்டத்தினால் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-7-201)

## வரட்சியால் பாதிக்கப்பட்டோருக்கு நோர்வே நிதியுதவி

கொழும்பு,செப்.16

அநுராதபுரம், புத்தளம், குருநாகல் ஆகிய இடங்களில் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவவென நோர்வே அரசு ஒரு லட்சத்து 45 ஆயிரம் ரூபா அமெரிக்க டொலரை வழங்க முடிவுசெய்துள்ளது.

வரட்சியினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உதவுவதற்காக இப்பணம் செலவுசெய்யப்படும்.

கிராமிய மக்கள் இயற்கை அழிவுகளால் பாதிக்கப்படுவதிலிருந்து விடுபடுவதற்கு சிறிய அளவில் உதவமுடிந்தமைக்கு மகிழ்ச்சியடைகின்றோம் என்று நோர்வேத் தூதுவர் தெரிவித்துள்ளார்.(ப)

## உயர்வலு மின்சாரத்தினால் மின்சாதனங்கள் செயலிழப்பு

யாழ்ப்பாணம்,செப்.16

உயர்வலு மின்சாரத்தின் காரணமாக மின்சார உபகரணங்கள் பலவும் செயலிழந்த சம்பவம் கடந்தவாரம் நுணாவில் மேற்கு மட்டுவில் பகுதியில் நடைபெற்றது.

இதனால், பலரது மின்குமிழ்கள் உட்பட வானொலி, தொலைக்காட்சிகள் பலவும் செயலிழந்ததாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கடந்த ஒரு மாதத்திற்கு முன்னரும் இவ்வாறு திடீரென அதிகரித்த மின்சாரத்தின் காரணமாகப் பலரது மின்சாதனப் பொருள்கள் பழுதடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (10-204)

## மிலேனியம் புலமைப்பரிசில் கொடுப்பனவுக்கு விண்ணப்பம்

வலி.தெற்கு,செப்.16

ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்புகளில் கல்வி கற்கும் வசதிகள் குறைந்த தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு மிலேனியம் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் இவ்வருடம் புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் 2003 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ.சாதாரண பரீட்சைக்குத் தோற்றி இவ்வருடம் உயர்தர வகுப்புகளில் கல்வி கற்றுவரும் மாணவர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பத்தை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பிரிவினர் கோரி உள்ளனர்.

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் கல்வி கற்கும் வறுமைநிலையிலுள்ள, வசதிகள் குறைந்த, ஆனால் திறமையுடைய மாணவர்களே இதற்காகத் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

பாடசாலை அதிபர்கள் இவ்வகையான மாணவர்களை இனங்கண்டு அவர்களின் பெயர், விவரங்களை வலயக்கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி நிதியத்திலிருந்து வழங்கப்படவுள்ள மிலேனியம் புலமைப்பரிசில் கொடுப்பனவுகளுக்கான மாணவர்களின் பெயர், விவரங்கள் இம்மாதம் 24 ஆம் திகதிக்கு முன்பாக ஜனாதிபதி செயலகத்திற்கு வலயக்கல்விப் பணிப்பாளர்களால் அனுப்பிவைக்கப்பட வேண்டியுள்ளதால் பாடசாலை அதிபர்கள் காலதாமதம் செய்யாமல் விவரங்களை அனுப்பி உதவுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(10-152)

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.16

இலங்கை மனித உரிமைகள் ஆணைககுழுவின் ஆதரவுடன் எதிர்வரும் 20ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் மீளக்குடியமர்பவர்கள் தொடர்பாகவும் அவர்களுக்கான நீண்டகாலப் பயன்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடல் ஒன்று யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திட்டமிடல் அலுவலர் வி.வேழினி வரவேற்புரையையும் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் அறிமுக உரையையும் நிகழ்த்துவர்.

இதற்கெனத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் மட்டுமே நிகழ்வில் பங்குபற்றுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-10-201)

இந்தியாவில் தயாரிக்கப்பட்டு இங்கு அனுப்பப்பட்ட

## கல்சியம் குளிகைப் பாவனை: உடன் நிறுத்துமாறு பணிப்பு!

வலி.தென்.மேற்கு,செப்.16

அரசினர் வைத்தியசாலைகளில் தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் - இந்தியத் தயாரிப்பான 'கல்சியம் லக்ரேற்' (Calcium Lactate Tablet - 300 Mg) என்ற குளிகை மருந்து பாவனைக்கு உகந்தது அல்ல என்றும், இதன் பாவனையை உடன் நிறுத்துமாறும் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவின் பணிப்பாளர் அறிவித்திருக்கின்றார்.

இந்திய நாட்டின் மருந்து உற்பத்தி நிறுவனமான 'AXON DRUGS Pvt. Ltd' என்ற நிறுவனம் உற்பத்தி செய்த இந்தக் குளிகை, பகுப்பாய்வு செய்யப்பட்ட போது அது பாவனைக்குத் தரமற்றது என்று கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, இதன் பாவனையை உடனடியாக விலக்குமாறு, இது தொடர்பாக வெளியிடப்பட்ட அவசர சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கை நாட்டிலுள்ள மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள், போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் மற்றும் அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்பு 'Oral Penicillin' (125 மில்லிகிராம்) எனப்படும் குளிகையின் பாவனையையும் நிறுததுமாறு கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்கள மருத்துவ விநியோகப் பிரிவுப் பணிப்பாளர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் குளிகையும் இந்தியாவிலுள்ள நிறுவனம் ஒன்றினால் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஜ-135)

## ஓய்வூதியத் திட்டத்தில் மீனவர்களும் இணையலாம்

யாழ்ப்பாணம்,செப்.16

கடற்றொழில் மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை என்பன இணைந்து செயற்படுத்தும் ஓய்வூதிய சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு மீனவர்களும் இணைந்துகொள்ளமுடியும்.

கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இத்திட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட மீனவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்.

ஓய்வூதியத்தில் இணைந்துகொள்ள விரும்பும் மீனவர்கள் மேலதிக விவரங்களை யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தொவித்தார். (4-7)

## மூன்று நாள்கள் தமிழ் இலக்கிய விழா; இறுதிநாளன்று பண்பாட்டு ஊர்வலம்

யாழ்ப்பாணம்,செப்.16

அடுத்தமாதம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மூன்று நாள்கள் நடைபெறவுள்ள தமிழ் இலக்கிய விழாவின் இறுதி நாளன்று மாபெரும் பண்பாட்டு ஊர்வலம் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் நடத்தப்படுகின்ற இந்தத் தமிழ் இலக்கிய விழா அடுத்த மாதம் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இறுதிநாளான 11ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு நல்லூர் ஆலயத்தில் இருந்து மாபெரும் பண்பாட்டு ஊர்வலமும் ஊர்தி ஊர்வலமும் ஆரம்பமாகி யாழ. இந்து மகளிர் கல்லூரியை வந்தடையும்.

கிராமியக் கலைகளான கரகம், காவடி, கோலாட்டம், கும்மி, மயிலாட்டம், ஒயிலாட்டம் போன்றவை பண்பாட்டு ஊர்வலத்தில் இடம்பெறும்.

இந்தப் பண்பாட்டு ஊர்வலத்தில் சகல பாடசாலை மாணவர்களையும் பங்குபற்றுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (4-7)

### நாளை

புரட்டாதி 1
வெள்ளிக்கிழமை
(17.09.2004)
திதி : திருதியை
முன்னிரவு 6.33
நட்சத்திரம் : சித்திரை
முன்னிரவு 6.36
சுபநேரம்: 6.03 - 7.33
ராகுகாலம்: 10.33 - 12.03
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஆண்டவன் தந்த கொடைகளைச் சுயநலத்துக்குப் பயன்படுத்தாமல் பிறர் நலத்துக்காகவும் பயன்படுத்துங்கள்.

## உதயன்

## ஈராண்டுகள் கடந்தும் இன்னும் இழுபறி நிலையே!

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தற்போதைய அமைதி முயற்சிகளை ஒட்டிய நேரடிப் பேச்சுகள் ஆரம்பித்து இன்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

2002 செப்ரெம்பர் 16ஆம் திகதியன்றே தாய்லாந்தின் துறைமுக நகரான சட்டஹிப்பில் உள்ள கடற்படைத் தளத்தில் இலங்கை அரசுப் பிரதிநிதிகளும், புலிகளும் நேரடிப் பேச்சுக்காக நேருக்குநேர் அமர்ந்தனர்.

அதேபோன்றே ஜப்பானின் ஹக்கோனே நகரில் ஆறாவது சுற்றுப் பேச்சுக்காக - கடைசி நேரடிச் சந்திப்புக்காக - இரு தரப்பினரும் நேருக்கு நேர் அமர்ந்து பதினெட்டு மாதங்கள் (ஒன்றரை வருடங்கள்) கடந்துவிட்டன.

முதலாவது சுற்றுப்பேச்சு நடந்துமுடிந்த கையோடு அப்பேச்சுக் குறித்தும், அன்றைய அரசியல் சூழ்நிலை குறித்தும் விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுத்தலைவரும், மதியுரைஞருமான அன்ரன் பாலசிங்கம் மிகுந்த நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

"இதுவரை நடந்தவை குறித்துப் புலிகள் மகிழ்ச்சி அடைகிறார்கள். பரஸ்பர நல்லுறவை விருத்தி செய்வதில் குறிப்பிடத்தக்க வெற்றியை நாங்கள் ஈட்டியிருக்கிறோம் எனக் கருதுகின்றோம். கலந்துரையாடல்கள் மிகவும் ஆக்கபூர்வமானவையாக அமைந்தன. நாங்கள் சில முடிவுகளை எட்டியுள்ளோம். இந்த முயற்சிகள் தொடரும்" - என்று பாலசிங்கம் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இதேபோன்ற நம்பிக்கையை அரசுக் குழுவின் தலைவராகப் பேச்சில் பங்குபற்றிய அப்போதைய அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸும் வெளியிட்டிருந்தார்.

ஆனால், இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இன்று அமைதி முயற்சிகள் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கின்றன; பரஸ்பர நம்பிக்கைகள் தகர்ந்துவிட்டன. அவநம்பிக்கையும் சந்தேகமுமே வளர்ந்து எஞ்சி நிற்கின்றன.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான கடைசி வாய்ப்பும் அடிபட்டுப் போகக்கூடிய அவல நிலையே மிஞ்சியுள்ளது.

ஏன் இந்த விசனிக்கத்தக்க நிலைமை ஏற்பட்டது?

இலங்கையின் தேசியப் பிரச்சினையான இனப் பிணக்கைத் தென்னிலங்கையில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான சித்து விளையாட்டுக்கு, துரும்பாகப் பயன்படுத்திய அவலத்தின் விளைவே இது.

காலங்காலமாக மேடையேறிய இந்த அபத்த நாடகம், இப்போதும் கனகச்சிதமாக நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றது.

இன்று நிலைமை மிகமிக மோசமடைந்துவருகின்றது. அமைதி வழியில் தீர்வுகாண்பதற்கான வாய்ப்புகள் அருகிவருகின்றன.

இந்த மோச நிலைக்கும் அதனால் ஏற்படக்கூடிய விபரீத விளைவுகளுக்கும் முழுப்பொறுப்பேற்க வேண்டியவர் இந்த நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிதான். வேறு எவருமே இல்லை.

அவரும் அவரது அரசும் - இரட்டை நாக்குகள் அல்ல. பல நாக்குகள் கொண்டு - இந்த இனப்பிரச்சினை விடயத்தைக் கையாண்டு வருவதே நம்பிக்கைகள் தகர்வதற்கு - சாதகமான நிலைமை பாதகமானதற்கு - பெரும்பாலும் காரணமாகும்.

"இனப்பிரச்சினை விடயம் தொடர்பாக ஜனாதிபதி காலையில் ஒன்று கூறுகின்றார். பகல் வேளை வேறு கூறுகின்றார். இரவிலோ எல்லாவற்றுக்கும் தலைகீழாகப் பிறிதொன்றை உரைக்கின்றார். அவரது கூட்டு அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியோ இவை எல்லாவற்றுக்கும் மாறாக வேறு ஒன்றை முழங்குகின்றது. எனவே, தென்னிலங்கை முதலில் ஒரே குரலில் - ஒரே திசையில் - விடயங்களைக் கையாளத் தயாராகவேண்டும்" - என்று வற்புறுத்தியிருக்கின்றார் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் தென்னிலங்கையை ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரத்தக்கதாக ஐக்கியப்படுத்தமுடியாத இந்த ஜனாதிபதியும் அவரது அரசும் சமாதான முயற்சிகள் மூலம் தீர்வு கண்டு, ஐக்கிய இலங்கையை உறுதிப்படுத்தலாம் என நினைப்பது வெறும் பகற்கனவே அன்றி வேறில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமாகி, ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நின்றுபோன சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் தொடங்கி, நல்ல திசையில் முன்நகர வேண்டுமானால் -

தற்போதைய யுத்த நிறுத்த ஏற்பாடுகளும் அமைதி நிலையும் நின்று நிலைத்து நீடிக்கவேண்டுமானால் -

மீண்டும் யுத்த மேகம் சூழ்ந்து, போர்வெடிப்பதைத் தவிர்க்கவேண்டுமானால் -

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தற்போது வெளிப்படுத்தும் 'சண்டித்தனப் பேச்சு'ப் போக்கை ஜனாதிபதியும் அவரது அரசும் நிறுத்தி, பரஸ்பரம் நல்லுறவையும், நம்பிக்கையையும் கட்டியெழுப்பும் ஆக்கபூர்வ செயற்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். அதுவே ஒரே வழியாகும்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஒரிஜினல் நிலையிலுள்ள NISSAN SUNNY HB 310 5கியர் A/C 13-5 XXX கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 215, 2nd CROSS STREET, HOSPITAL ROAD, JAFFNA. T.P.: 077 - 7588637. (36443)

DVD Rewriter, Capture Card (TV Card + Radio + VHS Capture) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776 - 138978. (36439)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், குருசுறோட், முகப்பு யாழ். பிரதேச செயலகம் பின்புறம் கிணற்றுடன் மூன்று வீடுகள் அமைக்கக்கூடிய ஏழு பரப்புக் காணி கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மாலை 3.00 மணிக்குப்பின் மு.திருநாவுக்கரசு, 127/7, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 - 2326. (36438)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1966 ஆயிலியம், 3ஆம் பாதம், லக்கினத்தில் செவ்வாய், கனடா மணமகனுக்கும், 1969 மகம், வெளிநாடு செல்லவுள்ளவருக்கும் பொருத்தமான மணமகள்கள் தேவை. அத்துடன் 1974, பரணி, பட்டதாரி மணப்பெண்ணுக்கு வெளிநாட்டு மணமகன் தேவை. விளம்பர இலக்கம் 2377, C/o உதயன், யாழ்ப்பாணம்.(36426)

## வீடு வாடகைக்கு

மானிப்பாய் வீதி, யாழ்.மாநகரசபை எல்லைக்குள் இரு அறைகள் கொண்ட (Annex) (சிறு குடும்பத்துக்கு உகந்த) வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 0777 989364. (சீ-37674)

## நாடகநூல் விற்பனைக்கு

ஆசிரியர் தினவிழாவில் நடிப்பதற்குப் பொருத்தமான 'ஆசிரியர் தினவிழா' என்ற நாடகத்தைக் கொண்டது. 400 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'வானொலி நாடகம் எழுதுவது எப்படி?' ரூபா 150/= (36446)

## தவறிவிட்டது

தெல்லிப்பழையைச் சேர்ந்த இராசரத்தினம் முரளீதரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (722491165V) மானிப்பாய்க்கும் குப்பிளானுக்கும் இடையில் 05-09-2004 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தெல்லிப்பழை தபாலகத்தில் கொடுத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (36444)

வவுனியா, வேப்பங்குளம், 6ஆம் ஒழுங்கையில் வசிக்கும் கந்தசாமி நித்தியானந்தன் என்பவரது பிரயாணப்பை, தேசிய அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் நல்லூர் ஆலயத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: த.பரராசசிங்கம் (J.P.), நீர்வேலி வடக்கு, நீர்வேலியில் ஒப்படைத்துதவவும். (36449)

## வங்கியியல் கற்கைக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,செப்.16

வங்கியியல் கற்கை நெறிகளை மேற்கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் விசாரணைகள் /பதிவு நிர்வாக இயக்குநர், யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர் திணைக்களம், 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. மேறபடி கற்கைநெறிகளுக்கான விரிவுரைகள் ஒக்ரோபர் மாதம 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. (201)-

# இலஞ்சக் குற்றச்சாட்டு: அதிபர் பிணையில் விடுதலை

எவ்வாறு வங்கியில் வருமானத்துக்கு அதிகமான பணம் சேர்த்தார் என்பதைத் தெரிவிககமுடியாமல் பாடசாலை அதிபர் ஒருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வடமேல் மாகாண பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். மேற்படி மாகாணத்தின் பிரதான பாடசாலையொன்றின் அதிபரான இவர், மாணவர்களை அனுமதிப்பதற்காகப் பெற்றோரிடம கடந்த சிலவருடங்களாக்வே லஞ்சம் வாங்கி வந்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். ஒரு வங்கியில் அவர் பெயரில் வைப்பிலிடப்பட்டுள்ள 25 லட்சம் ரூபாய்ககு கணக்கு விவரம் காட்டுவதற்கு அவர் தவறிவிட்டார் எனறு பொலஸார் தெரிவித்துள்ளனர். குருநாகல் நீதிவான்முன் ஆஜர்செய்யப்பட்ட அவர், 25 ஆயிரம ரூபாய் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் ஒரு லட்சம் ரூபாய் சீரப் பிணையும் பறிக்கபபட்டது. (ப)


IMMEDIATE VACANCY
For Area Sales Manager
TERRITORY
Jaffna, Kilinochi, Mannar & Vavuniya



- Proven Records of Sales
- To Meet the Day to Day Chalenges
- Fluency in all three languages

Fax your CV with Contact Phone Number & Fax Number
CLENOL
No. 69, Kandy Road, Kurunegala.
Fax: 037 22 32084

இணைய, இணையத்தள சேவை
.com .net .org .info
Doman Registration Rs.400/= per Year
Hosting upto Rs.2000/= per year
Limited time offer
SAAMSTECH, 841, Hospital Road, Jaffna.
T.P.: 0773 068968. (சீ-37510)

SAAMSTECH இன்
ஆங்கில, சிங்கள
நேரடி வகுப்பு
காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.
SAAMSTECH
841, Hospital Rd., Jaffna.
Phone: 0773068968.
(சீ-37511)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் அம்பலவாணர் செல்லையா

(இளைப்பாறிய அதிபர், வேலணை)

வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு வேலணையில் ஆசிரியராகவும் அதிபராகவும் வேலணை கிராமசபையின் முன்னாள் தலைவராகவும் வேலணை கிராமசபையின் முன்னாள் இணக்கச்சபைத் தலைவராகவும் இருந்து வேலணை மக்களுக்காக அருந்தொண்டாற்றிய அமரர் அம்பலவாணர் செல்லையா அவர்கள் 12-09-2004 ஞாயிற்றுக்கிழமை காலமானதையிட்டு, அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேலணை மக்களாகிய நாம் பிரார்த்திக்கின்றோம்.

(36445) (26-14) - வேலணைவாழ் மக்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் கடற்றொழில் பரிசோதகராகக் கடமையாற்றும் திரு.இ.ரவீந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இராசமாணிக்கம் பொன்னம்மா

அவர்கள் நேற்று (15-09-2004) காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்கள உத்தியோகத்தர்கள்.

(36447) (21-14-26)


இணையத் தளம் ஊடாக
24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது
WORLD TAMILAR
உலகத் தமிழர் வானொலி
இணைய முகவரி: WWW.Wtrfm.com
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க
நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
26 உற்சவ நாள்களிலும்
(ஒகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம் மூலம் செவிமடுத்து மகிழலாம்).
உலகத் தமிழர் வானொலியுடன்
நேரடியாக இணைய
MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969
(சீ-36863)
உலகத் தமிழர் உறவுப் பாலமாக
உலகத் தமிழர் வானொலி
ஊடக அனுசரணை: 'உதயன்'



Caliber 115
பஜாஜ்



அபார சக்தி, எரிபொருள் சிக்கனம், தோற்றம்
சகலமும் உங்களுக்கென்றே!

சில நிகரற்ற தன்மைகள்
- எரிபொருள் சிக்கன K-Tec தொழில் நுட்பத்துடன் கூடிய 111.6 cc 4-ஸ்ட்ரோக் என்ஜின்
- லீட்டருக்கு 90 கி. மீட்டர் (கடும் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டது)
- அழகிய ஒப்பனையுடன் ஒப்டோப்ரீஸம் ஹெலொஜன் ஹெட்லேம்ப்
- உயர் வேகம் காட்டுதல், மற்றும் ட்ரிப் மீற்றர்
- எந்நேரமும் குறைந்த எரிபொருளில், கூடிய பலனை உறுதி செய்யும் TRICS முறைமை
- ஹை பீம் ஃப்ளேஷர்
- ஒரே சாவித் துவாரத்தால் என்ஜினை இயக்குதலும், ஹென்ட்ல் பார் மூடுதலும்
- டிஸ்க்ப்ரேக் மற்றும் ட்ரம்ப்ரேக் வடிவங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

Caliber 115
தன்னம்பிக்கையுடன் சவாரிசெய்யுங்கள் எடுப்பாக ஓட்டிச் செல்லுங்கள்

பஜாஜ்
இலங்கையில் முதன்மையாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி: 4700600. தொலைநகல்: 4700677, 2687175.
மோட்டார் சைக்கிள் பற்றிய விபரங்களுக்கான அவசர அழைப்பு: 4715050.
இணைய தளம்: http://www.dpmco.com மின்னஞ்சல்: info@dpmco.com
பிராந்திய அலுவலகங்கள்: நீர்கொழும்பு, பக்கலை, மத்துகமை, கண்டி, நுவரெலியா, மாத்தறை, அனுராதபுரம், தெஹிபத்தக்கண்டிய, பதுளை, குருநாகல், புத்தளம், இரத்தினபுரி, அம்பாறை, திருகோணமலை, மொனறாகலை.
சகல பிராந்திய அலுவலகங்களினதும் பொதுவான தொலைபேசி எண்கள்: 4700600.
நாடெங்கிலுமுள்ள எமது விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

2 வருட அல்லது கி.மீ. 30,000துக்கான தரம்* அளவற்ற உத்தரவாதம்
*முதலாவது காக்கிறவையக்கும்
டிஸ்க் ப்ரேக் வடிவம் ரூ. 85,519/-
ட்ரம் ப்ரேக் வடிவம் ரூ. 80,773/-
(VAT உள்ளடக்கப்படவில்லை)
mel ads 04/09/3471


## ஆஸ்பத்திரிகளின் தேவை விவரம் சேகரிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளின் நடைமுறைத் தேவைகள் பற்றிய தரவுகளை யாழ். சுகாதாரத் திணைககளம் திரட்டி வருகின்றது.

தீருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் கடந்தவாரம் அனுப்பிவைத்துள்ள கடிதத்திற்கிணங்க இந்த நடைமுறைத் தேவைகள் பற்றிய தரவுகள் திரட்டப்பட்டு வருவதாக யாழ். சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் தத்தமது வைத்தியசாலைகளின் நடைமுறைத் தேவைகள் பற்றிய தரவுகளையும் விவரங்களையும் உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு யாழ. சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் கடித மூலம் கேட்டுள்ளார்.(ஐ-135)

## கண்காட்சிக்கு ஏற்பாடு

சுழிபுரம் அமரர் க. கார்த்திகேசு எழுதிய நூலகள் கொண்ட கண்காட்சியை நடத்துவதறகு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (10-28)

# மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் -2004

## தொடரிலிருந்து வெளியேறியது சிம்பாப்வே; இலங்கை 4 விக்கெட்டுக்களால் வெற்றி!

லண்டன்,செப்.16

மினி உலகக்கிண்ணப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான போட்டியிலும் சிம்பாப்வே அணி தோல்வியுற்றதை அடுத்து தொடரில் இருந்து வெளியேறியுள்ளது. அந்த அணி.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி. சிம்பாப்வே அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு கேட்டுக்கொண்டது. இதற்கமைய களமிறங்கிய சிம்பாப்வே அணிக்கு இலங்கை அணியின் பந்துவீச்சுப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. இதனால், 85 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை விரைவாக இழந்தது அந்த அணி. ஆயினும் அடுத்து வந்த துடுப்பாட்ட வீரர்கள் நிலைத்து நின்று ஆடியதை அடுத்து 49.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. சிம்பாப்வே அணி.

அணியின் சார்பில் 18 வயதான இளம் வீரர் சிக்கும்பற 57 ஓட்டங்களையும் உத்சேயா 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை அணியின் சார்பில் நுவான் செய்லா 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் மஹ்றூப் 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் உப்புல் சந்தன 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

192 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சியைக் கொடுத்தனர் சிம்பாப்வே அணியின் பந்துவீச்சாளர்கள். இதனால் ஜயசூரிய 2 ஓட்டங்களுடனும் அவிஷ்க குணவர்த்தன 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஆயினும் சமன் ஜெயந்தவும் அணித்தலைவர் அத்தப் பத்துவும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடினர். இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது. பின்னர் ஆட வந்த சங்கக்கார, சந்தன, டில்ஷான் ஆகியோரும் தமது பங்களிப்பை வழங்கியதால் 43.5 ஓவர்களில் 6 விகெட்டுக்கள் இழப்பிற்கு உரிய இலக்கை அடைந்தது இலங்கை அணி.

அணியின் சார்பில் அத்தப்பத்து 43 ஓட்டங்களையும் ஜெயந்த 38 ஓட்டங்களையும் சங்கக்கார 28 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் சிம்பாப்வே அணியின் சார்பில் சிக்கும்பற 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக சிக்கும்பறவே தெரிவுசெய்யப்பட்டார்.

ஏற்கனவே நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுடன் தோல்வியுற்ற அமெரிக்க அணியும் தொடரில் இருந்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்று முன்தினம் பாகிஸ்தான்-கென்ய அணிகளுக்கிடையே நடைபெறவிருந்த ஆட்டம் மழையின் காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாமல் கைவிடப்பட்டது. இந்த ஆட்டம் நேற்று நடைபெறவிருந்தது. (10)



சிம்பாப்வே அணியின் விக்கெட் ஒன்றைக் கைப்பற்றிய மகிழ்ச்சியில் இலங்கை அணியின் பந்துவீச்சாளர் மஹ்றூப்.



இலங்கை அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ளும் சிம்பாப்வே அணியின் துடுப்பாட்ட வீரர் எடினாட் றெயின்ஸ்போட்.



இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சாளர் உப்புல் சந்தன பந்துவீசும் காட்சி இது.

## கிளென் மக்ராத் அல்லது பிரட் லீ இன்றைய போட்டியில் நீக்கப்படலாம்

லண்டன்,செப்.16

ஆஸ்திரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியில் கிளென் மக்ராத் அல்லது பிரட்லீ நீக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சு மிகச் சிறப்பாக இருந்தபோதும் 6 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்த மக்ராத் விக்கெட் எதனையும் கைப்பற்றவில்லை. 5 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்த பிரட்லீ ஒரு விக்கெட்டை மட்டுமே கைப்பற்றியிருந்தார். ஆனால், மைக்கல் கஸ்பரோவிச், கிலெஸ்பி ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிருந்தனர்.

இவ்வாறான நிலையில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பிரட் ஹொக், ஷேன் வட்சன், இயன் ஹார்வி ஆகிய மூவரில் ஒருவர் அணியில் சேர்க்கப்பட்டு மக்ராத் அல்லது லீ நீக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

இன்றைய இந்த ஆட்டத்தை இந்திய தொலைக்காட்சியான 'தூரதர்சன்' நேரடி ஒளிபரப்புச் செய்யவுள்ளது. (10)

## இங்கிலாந்து அணிக்கு வெற்றிவாய்ப்பு அதிகம்

லண்டன்,செப்.16

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையே நாளை நடைபெறவுள்ள போட்டியில் இங்கிலாந்து அணியே வெற்றியீட்டக் கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக அந்த அணியின் முன்னாள் வீரர் கிரேக் வைட் தெரிவித்துள்ளார்.

சொந்த மண்ணில் நடைபெறும் போட்டி என்பதால் இங்கிலாந்து அணி நிச்சயம் சாதிக்க முற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)


### இன்றைய போட்டி ஆஸ்திரேலியா எதிர் நியூஸிலாந்து



சிம்பாப்வே துடுப்பாட்ட வீரர் புறொஸ்பர் அற்சியா பந்துவீச்சை எதிர்கொள்ளும் காட்சி இது.



சிம்பாப்வே அணியின் விக்கெட் ஒன்றை வீழ்த்திய மகிழ்ச்சியில் இலங்கை அணியின் பந்துவீச்சாளர் சமிந்த வாஸ் மற்றும் ரீ.எம்.டில்ஷான் ஆகியோர்.



சிம்பாப்வே துடுப்பாட்ட வீரர் பிரெண்டன் றெய்லர் அடித்த பந்தை தடுக்க முற்படும் இலங்கை அணி வீரர் மஹேல ஜயவர்த்தன.

## 'ஏ' பிரிவு ஆட்டங்களில் நியூஸிலாந்து அணி வெல்லும் சாத்தியம் உண்டு

லண்டன்,செப்.16

உலகக் கிண்ணப் போட்டியின் 'ஏ' பிரிவு ஆட்டங்களில் நியூசிஸிலாந்து அணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என்று பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் பொப் வூல்மர் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் ரசிகர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறது மினி உலகக் கிண்ணத் தொடர். பலமான ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து அணிகள் இடம்பெற்ற பிரிவில் அமெரிக்கா மாட்டிக்கொண்டது பரிதாபம்தான்.

இந்தப் பிரிவைப் பொறுத்தவரை, நியூஸிலாந்துக்கே அதிக வாய்ப்பு என்பது எனது கணிப்பு. ஆஸ்திரேலிய அணி சிறந்த அணி தான். ஆனாலும், முன்புபோல அந்த அணி அச்சுறுத்தக்கூடியதாக இப்பொழுது இல்லை.

இந்தியா - பாகிஸ்தான் போட்டி பற்றிப் பேசாமல் இருக்கமுடியாது. இந்தத் தொடரிலேயே மிக அதிகம் எதிர்பார்க்கப்படும் போட்டி அதுதான். விற்பனை தொடங்கிய ஒன்றரை மணி நேரத்தில் இந்தப் போட்டிக்கான அனைத்து ரிகெற்றுகளும் விற்றுமுடிந்துவிட்டன. அதற்குப் பின்பு வந்த வர்களுக்கு "ஸாரி... டிக்கெட் இல்லை' என்ற பதில்தான் கிடைத்தது தெரிந்திருக்கும்.

இந்தப் போட்டியில் எந்த அணி வெற்றியீட்டும் என்று என்னால் கணிக்கமுடியவில்லை என்னால் மட்டுமல்ல... யாராலும் அவ்வளவு சுலபமாகக் கணிக்கமுடியாது. முடிவு எப்படி இருந்தாலும், ஆட்டம் நிச்சயம் ரசிகர்களைக் கவரும் வகையில் இருக்கும் என்பது மட்டும் உறுதி என்று பொப் வூல்மர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

புலிகளின் காவலில் வைக்கப்பட்டுள்ள

# இரு ஊர்காவலர்களின் உறவினர்கள் திருமலையில் உண்ணாவிரதப் போர்!

திருகோணமலை,செப்16

புலிகளின் காவலில் உள்ள கன்னம்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த இரு சிங்கள ஊர்காவலர் களையும் விடுவிக்கக் கோரி திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்னால் நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம் பிக்கப்பட்டது.

கடந்த 10ஆம் திகதி இந்த இரு ஊர்காவலர் களையும் ஆயுதங்களுடன் புலிகள் கடத்திச் சென்று தற்சமயம் தடுத்து வைத்திருககின்றனர் என்று அவர்களின் உறவினர்கள் கூறுகின்றனர். அந்த உறவினர்களே உண்ணாவிரதப் போராட டத்தை இப்போது ஆரம்பித்துள்ளனர்.

இரு ஊர்காவலர்களும் விடுவிக்கப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இந்த ஊர்காவலர்கள் இருவரும் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஆயுதங்களு டன் வந்தனர் என்பதாலேயே கைது செய்யப் பட்டனர் எனப் புலிகள் கூறுகின்றனர்.

தமிழீழ நீதிமன்ற உத்தரவில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் இருவரையும் அவர்களது உறவினர்கள் சென்று சந்திப்பதற்கு புலிகள் அனுமதித்திருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது.

மேற்படி இருவரையும் விடுவிக்கக் கோரி முன் னரும் இரு தடவைகள் உறவினர்கள் உண்ணா விரதப் போராட்டத்தை நடத்தியிருந்தனர். (க)


## தவறிவிட்டது

14-09-2004 அன்று இரவு 7 மணியளவில் பரமேஸ்வராச் சந்திக்கும் திருநெல்வேலிச் சந்திக்குமிடையில் Samsung ரக Camera Phone ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

குறிப்பு: இதற்குரிய Charger இல்லாமல் பாவிக்கமுடியாது என்பதை அறியத் தருகின்றேன்.

**கனகா பத்திரிகை விற்பனையகம்**

**இல.6, நவீன சந்தை, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.**

(36440) (21-13)


### கூட்டம்

உடுவில் பிரதேச செய லக கலாசார பேரவையின பொதுக்குழுக் கூட்டம் எதி வரும் 24ஆம் திகதி பிர தேச செயலகத்தில் நடை பெறவுள்ளது.

கலை கலாசாரத்துறை யுடன் ஈடுபாடு கொண்டுள்ள அல்லது அத்துறைகளில் ஆர்வமுள்ளவர்களை இக கூட்டத்தில் கலந்துகொள் ளுமாறு பிரதேச செயலா கேட்டுள்ளார். (10-152)

# எஸ்.பி.திஸாநாயக்க உயர் நீதிமன்றை அவமதித்தார் என நீதியரசர்கள் முடிவு

கொழும்பு,செப்.16

நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற காரணத திற்காக உயர் நீதிமன்றத்தில் குற்றம் சுமத் தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ். பி.திஸா நாயக்க 2லட்சத்து 50 ஆயிரம் ரூபா சரீர மற்றும் ரொக்கப் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலை மையிலான ஐவர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர் குழு முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸா நாயக்க சார்பில் உயர்நீதிமன்றத்தில் ஆஜ ரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி.சில்வா, தமது கட்சிக்காரர் நீதிமன்றத்தை அவமதிக்கும் நோக்கில் உரையாற்றவில்லை. இது தொடர்பாக எஸ்.பி. திஸாநாயக்க நீதி மன்றத்திடம் மன்னிப்புக் கேட்கிறார் எனவும் கவலை தெரிவிக்கிறார் எனவும் அவர் கூறி னார்.

நீதிமன்றத்தை விமர்சிப்பதற்கு இருக்கின்ற சட்டவிதிகள் மற்றும் விழுமியங்களுக்கு மாறாக எவரும் நீதிமன்ற செயற்பாடுகளை விமர்சிக்க முடியாது என பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸா நாயக்க நீதிமன்றத்தை அவமதித்திருக்கிறார் என்று நீதிமன்றம் தீர்மானித்திருப்பதனால் அவ ருக்கு தண்டனை வழங்காதிருப்பதற்கும் அவர் நிரபராதி என்பதை நிருபிப்பதற்குமான காரணங்களைக் கூறுமாறும் உயர் நீதிமன் றம் உத்தரவிட்டிருக்கிறது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 3ஆம் திகதி காலி ஹபராதுவப் பகுதியில் நீதிமன் றத்தை அவமதிக்கும் வகையில் எஸ்.பி.திஸா நாயக்க உரையாற்றினார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பான ஒளிநாடா உயர் நீதிமன் றத்தில் நேற்று ஒளிபரப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பாக இரு தரப்பின ருடைய எழுத்துமூல அறிக்கை ஒக்ரோபர் 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என உத்தரவிட்ட உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கான திகதியைக் குறிப்பிடாமல் வழக்கை ஒத்திவைத்துள்ளது. (க)

### விதைநெல் பெற விண்ணப்பிக்குக

சாவகச்சேரி,செப்.16

சாவகச்சேரி வடக்குப் பகுதியைச் சேர்ந்த காலபோக நெற்செய்கையாளர்கள் காலபோக நெற்செய்கைக்கான விதைநெல்லை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்குமாறு இப்பகுதியைச் சேர்ந்த விவசாய சம்மேளனத் தலைவர் நாநல்ல தம்பி அறிவித்துள்ளார்.

காலபோக நெற்செய்கையின் போது கால் நடைகளை கட்டி வளர்க்குமாறும் அவர் அறி வித்துள்ளார். (8-31)







## 8ஆம் ஆண்டின் நினைவலைகள்



அமரர்

**பூதர் இரத்தினம்**

(ஓய்வு பெற்ற ஊழியர், காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்)

*ஆண்டுகள் எட்டுகள்தான் ஆயினவே*
*ஆயிரம் உறவுகள் இருந்தாலும்*
*'அப்பா' என்றழைக்க*
*உறவொன்றில்லையே?*

மலர்வு 01-10-1939 | உதிர்வு 16-09-1996

பிரிவால் வாடும்: **குடும்பத்தினர்.**

நபாற் கந்தோர் அருகில் தெல்லிப்பழை.

(36441) (21-13)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

திருமதி

**நல்லம்மா கந்தசாமி**

(செல்லக்கண்டு)

(முன்னாள் விசேட ஆணையாளர், வல்வை நகரசபை)



மண்ணில் 22-07-1923 விண்ணில் 19-08-2004

"ஆருயிர் அன்னைபோல் அவனியில் யார் இருப்பர்
ஆறவில்லை எம் நெஞ்சம் அரவணைத்த உமைநினைந்து"

18.09.2004 சனிக்கிழமை காலை நடைபெறுகின்ற வீட்டுக்கிருத் தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சந்தை வீதி, உடுப்பிட்டி. (36416)(39-13-21)

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**



## மரண அறிவித்தல்

**தம்பிமுத்து பூபாலன்**

(சட்டத்தரணி, சமாதான நீதிவான், முன்னாள் சட்ட ஆலோசகர் - Jaffarjee Brothers)

நுணாவிலைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தி, நல்லூரை வசிப்பிட மாகவும் கொண்ட தம்பிமுத்து பூபாலன் அவர்கள் கொழும்பில் 14.09.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பையா, சிவபாலன், பாக்கியலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நல்லூரைச் சேர்ந்த நாகலிங்கம் - யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நேசலக்ஷ்மியின அன்புக் கணவரும் தமயந்தி (லண்டன்), மேனகா (லண்டன்), யமுனா (ஆசிரியை, நல்லாயன் கன்னியர்மடம் - கொட்டாஞ்சேனை), Dr.சாவித்திரி (லண்டன்), Dr.லக்ஷ்மன் (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாபரன் இடைக்காடர் (லண்டன்), ரவிராஜ் (லண்டன்), சுரேந்திரா (Sri Lankan Airline), ரவீந்திரன் (லண்டன்), Dr.லோஷணி (Lady Ridgeway Hospital) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜன், பிரவீனா, சாம்பவி, மதுஷா (நல்லாயன் கன்னியர்மடம்), லவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அன்னாரது இல்லத்தில் நேற்று (15-09-2004) புதன்கிழமை வைக்கப்பட்டு இன்று (16.09.2004) வியாழக்கிழமை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மாலை 5.00 மணிக்கு கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

426/16,5/8, V.T.V. தொடர்மாடி, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13. தொ.பே. 5354619, 0714 - 123457

தகவல்: பூபாலன் லக்ஷ்மன் (மகன்)

(36437) (26-13-21)

# பேச்சை ஆரம்பிக்க இலங்கைக்கு ஜப்பான் அழுத்தம் தரவேண்டும்

## கூட்டமைப்புக்குழு தூதரிடம் கோரிக்கை

கொழும்பு,செப்.16

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமைகளில் ஒன்றான ஜப்பான் சமாதானப் பேச்சுகளை காலம் தாழ்த்தாது மீண்டும் ஆரம்பிக்கும்படி இலங்கை ஜனாதிபதிக்கும், அரசுக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் நான்கு தலைமைகளுள் ஒன்றான ஜப்பானுக்கு இந்தக் கடப்பாடு உண்டு எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் ஜப்பானியத் தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

கூட்டமைப்பின் வெளிநாட்டு இராஜதந்திரப் பிரசாரக் குழுவே இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

இக்குழுவின் உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் நேற்றுமுன்தினம் மாலை இலங்கையில் உள்ள ஜப்பானியத் தூதுவரை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோதே இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணி முதல் 5.20 வரை நடைபெற்ற இச்சந்திப்பின்போது ஜப்பானியத் தூதுவர் அக்சியோ சூடாவுடன் இரண்டாவது செயலாளர் கென்ஜீ மியாட்டாவும் உடனிருந்தார்.

யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருக்கின்றபோதும் கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் அசம்பாவிதங்களுடன் அரச படையினருக்கு உள்ள தொடர்பு மீண்டும் ஒரு யுத்தம் வெடித்துவிடுமோ எனப் பீதியையும் அச்ச உணர்வையும் மக்கள் மனதில் ஏற்படுத்தி வருகின்றது.

தேங்கிக்கிடக்கும் சமாதானப் பேச்சைக் காலம் தாழ்த்தாது மீண்டும் ஆரம்பிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்பது தனி நாட்டுக்கான அத்திபாரம் என விசமத்தனமான பிரசாரம் மேற்கொள்ளப்படுவது அபத்தமான செயலாகும்.

முன்னைய அரசு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக மூன்று வரைவுகளை சமர்ப்பித்துள்ளது. அவை அனைத்தும் இணைந்த வடக்கு - கிழக்கை மையமாகக் கொண்டே முன்வைக்கப்பட்டன.

இதன் அடிப்படையிலேயே புலிகளும் தமது வரைவுகளை முன்வைத்துள்ளனர்.

எனவே, இதன் அடிப்படையிலேயே மீண்டும் சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

தப்பபிப்பிராயங்களும் பீதியும் நீக்கப்பட வேண்டும். இதனை ஏற்படுத்துவதற்கு ஜப்பானுக்கு அதிமுக்கிய கடப்பாடு உண்டு என இக்குழுவினர் ஜப்பானியத் தூதுவரிடம் எடுத்துக் கூறினார்கள். (க)

## காத்தான்குடியில் ஹர்த்தால்

காத்தான்குடி,செப்.16

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன், ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றும் அங்கு இடம்பெற்றது. ஆனால், காத்தான்குடியில் வர்த்தக நிலையங்கள், வங்கிகள், பொதுச்சந்தைகள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

போக்குவரத்துச் சேவைகள் பெரிதாக இடம் பெறாதபோதிலும், உள்ளூர் சேவைகளை காத்தான்குடி நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி டிப்போ நடத்தியது.

காத்தான்குடி முஸ்லிம் மக்கள் ஒன்றியம் இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்திருந்தது.

இந்த ஹர்த்தாலுடன் இணைந்ததாக நேற்று முன்தினம் காலை ஆர்ப்பாட்டப்பேரணியும் இடம்பெற்றது.

காத்தான்குடி முகைதீன் மெத்தை ஜூம்ஆப்பள்ளிவாசல் முன்றிலில் ஆரம்பமான இந்தப் பேரணி காத்தான்குடிப் பிரதேச செயலக முன்றிலில் முடிவுற்றது.

காத்தான்குடிப் பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாமிய மார்க்கம் தொடர்பில் தவறான கொள்கை, கோட்பாடுகளைப் பரப்பிவருகின்ற நடவடிக்கைகளுக்கு எதிராகவே இந்த ஹர்த்தாலும், பேரணியும் இடம்பெற்றன.

முஸ்லிம்களைப் பிழையாக வழிநடத்தும் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துமாறு அரசையும், பொது நிறுவனங்களையும் வலியுறுத்தி துண்டுப்பிரசுரம் ஒன்றும் நேற்று அங்கு விநியோகிக்கப்பட்டது. (க-3)

## சீன ஆயுத விநியோக நிறுவன அதிகாரிகள் இலங்கை வருகை?

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியின் போது கைவிடப்பட்ட - சீனாவுடனான - ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தத்தை இன்றைய அரசு மீண்டும் புதுப்பித்துள்ளது.

இந்த ஒப்பந்தம் தொடர்பாகப் பேச்சுக்களை நடத்துவதற்காகச் சீனப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் இங்கு இரகசியமாக வந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இவர்கள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருடனும் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளுடனும் இரகசியமாகப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை இராணுவத்திற்கு ஆயுதங்களை வழங்கிவந்த 'நொறிங்கோ' நிறுவனத்துடனான ஒப்பந்தம், முன்னைய அரசினால் ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின் புதுப்பிக்கப்படவில்லை.

இப்பொழுது போர்நிறுத்த உடன்பாடு நடைமுறையில் இருக்கின்றது.

அதேவேளை, சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகக் கூறிக்கொள்ளும் இலங்கையின் தற்போதைய அரசு சீன ஆயுத உற்பத்தி நிறுவனமான 'நொறிங்கோ' வுடன் மீண்டும் உறவை ஏற்படுத்திக்கொண்டது.

இப்போக்கு அரசின் சமாதான நடவடிக்கைகளில் சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக வெளிநாட்டுச் செய்திநிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-3)

# அனைத்து முஸ்லிம் அரசியல்வாதிகளுடனும் ஆலோசித்தே பேச்சில் மு.கா.பங்குபற்றும்

## சொல்ஹெய்மைச் சந்தித்த பின் ஹக்கீம் அறிவிப்பு

கொழும்பு,செப்.16

சமாதானப் பேச்சுக்களின்போது முஸ்லிம் காங்கிரஸ் தனித்துச் செயற்படாது. வடக்கு-கிழக்கில் உள்ள முஸ்லிம் அரசியல்வாதிகளுடன் கலந்தாலோசித்து அவர்களுடன் ஒன்றிணைந்தே பேச்சில் கலந்துகொள்ளும் என முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்செல்ஹெய்முக்கும் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் கொழும்பில் ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரேயொரு பலம்வாய்ந்த கட்சி முஸ்லிம் காங்கிரஸே ஆகும். பேச்சில் முஸ்லிம்கள் பங்குபற்றுவது தொடர்பாக இக்கட்சிக்கு அதிக பொறுப்புண்டு. முஸ்லிம் காங்கிரஸ் சமாதானப் பேச்சின்போது தனித்துச் செயற்படாது வடக்கு - கிழக்கில் உள்ள முஸ்லிம் அரசியல்வாதிகளுடன் கலந்தாலோசித்தே செயற்பட அது தீர்மானித்துள்ளது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் மத்தியில் ஆயுதக் குழுக்கள் உருவாகி உள்ளன என அண்மைக்காலங்களில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இவை முற்றிலும் பொய்யானவை. இவ்வாறான செய்திகள்மூலம் முஸ்லிம்களின் அபிலாசைகள் குறித்த சர்வதேச சமூகத்தின் பார்வை திசைதிருப்பப்படுவதோடு, அதில் தாக்கத்தையும் உண்டு பண்ணும். கிழக்குச் சம்பவங்களைச் சர்வதேசரீதியில் பிரசாரப்படுத்தப்படும் பயங்கரவாத விவகாரத்தோடு தொடர்புபடுத்து வதன் மூலம் இங்கு முஸ்லிம் சமூகத்திற்கு இழுக்கு ஏற்படுத்த முயற்சிகள் நடக்கின்றன.

இவ்விடயங்கள் குறித்து எரிக்சொல்ஹெய்முக்கு இன்றைய சந்திப்பின்போது விரிவாக விளக்கிக் கூறப்பட்டது - என்றார் ஹக்கீம். (க)

# விடுதலைப் பாதையில் ஈழத்தமிழர்களை ஒன்றுபட வைத்தவர் அமரர் வன்னியசிங்கம்



"தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டு நின்றதாமோர் ஈழத்தமிழர்களின்" வரலாற்றினை எடுத்துக் கூறி, கூறப்பட்டுனின்ற தமிழர்களை இணையவைத்து நாம் தமிழர், எமது இனம் தமிழ் இனம், எமது மண தமிழ்ஈழம் என்ற தேசிய உணர்வை ஏற்படுத்தித் தந்தை செல்வாவுடன் தமிழரசு அணியின் கீழ்த் தமிழ்த்தேசிய விடுதலைக்காக ஒன்றுபட்டு தமிழ்த்தேசியத்தின் குரலாக ஒலித்தவர் கோப்பாய் கோமான் என்று அனைவராலும் போற்றப்படும் அமரர் கு.வன்னியசிங்கம் .

நாற்பத்திரண்டு ஆண்டுகள் ஓடிமறைந்து விட்டபோதும் அவர் கொண்ட கொள்கையின் உறுதியால் தமிழ்பேசும் இனம் தம் உரிமைக்காகப் போராடி அதனை வென்றெடுக்கும் நிலையில் இருக்கிறது.

1944 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 29 ஆம் திகதி கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற தமிழர் மகாசபைக்கூட்டத்தில் தமிழர்களுக்குச் 'சுயநிர்ணய' உரிமை வேண்டுமென்று பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரிக்குத் தந்தியடித்து. தமிழர்களின் சுதந்திர உணர்ச்சியை வெளிப்படுத்திய தமிழ்த் தலைவர்கள் சிலர் அந்த இலட்சியத்திலிருந்து விலகினர்.

அந்தநேரத்தில் தமிழ் மக்களின் சுதந்திர இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு தூய்மை, நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு, தியாகம், உறுதி என்ற அத்திவாரத்தில் தந்தை செல்வா தலைமையில் தானைத்தளபதியாக இருந்து தமிழரசு என்ற விடுதலைஇயக்கத்தை 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் நாள் ஆரம்பிப்பதற்குக் கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் உறுதுணையாக இருந்தார்.

**தமிழர்களை ஒன்றுபட வைத்தவர்**

தமிழரசு விடுதலை இயக்கத்தை ஆரம்பித்தபோது அதற்கு எதிரானவர்களிடம் இருந்து பலமான எதிர்ப்புக்கிளம்பியது.

கல்லெறி, பொல்லெறி, சொல்லெறி என்பவற்றையெல்லாம் ஏற்று யாழ்ப்பாணத்தான், வன்னியான், மட்டக்களப்பான், திரிகோணமலையான் என்று பிரிந்திருந்த தமிழ் இனதை பேச்சாற்றலால் ஒன்றுபடுத்தியவர் அமரர் வன்னியசிங்கம்.

வடக்கும் கிழக்கும் தமிழரின் பாரம்பரிய

**சு.அழகானந்தம்**
**ஆசிரியர்,**
**இணுவில் மத்தியகல்லூரி.**

தாயகம் என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறி 'தமிழ் இனத்தின் விடுதலைக்காகப் பட்டி தொட்டி எங்கும் விடுதலை முழக்கத்தை முன்னெடுத்துச் சென்ற தியாகச் செம்மல் அவர்'.

**தீண்டாமை ஒழிப்புக்கு முன்னின்றவர்**

சுதந்திரத்தை நாடிநிற்கும் தமிழ் இனம் தம்மோடு கூடிப்பிறந்தவர்களைச் சாதியின் பேரால் ஒடுக்குவது எமது விடுதலைப்போராட்டத்தைப் பின்னடையச் செய்துவிடும்.

எமது இனத்துக்கே சாபக்கேடாக இருக்கும் தீண்டாமை ஒழிக்கப்படவேண்டும் என்பதை ஆணித்தரமாக எடுத்துக்கூறி இந்தக் கோயில்களை வழிபாட்டுக்குத் திறந்துவிட்டும் சமபந்திப்போசனம் நடத்தியும் காட்டியவர்.

**நாடாளுமன்றில் வீரமுழக்கம்**

'தமிழ் அரசு நிறுவுவதே தமிழ்பேசும் மக்களின் நோக்கம். அந்த நோக்கத்தை அடைவதற்கு எத்துன்பத்தையும் ஏற்கத்தயாராக இருக்கின்றேன். தூக்குத்தண்டனை கிடைத்தாலும் அத்தூக்குக் கயிற்றை என்னுயிர்போகும் வரைக்கும் முத்தமிடத் தயாராக உள்ளேன்' என்று நாடாளுமன்றில் வீரமுழக்கம் செய்தார் வன்னியசிங்கம்.

**தமிழரசுக் கட்சியின் தலைவரானார்**

1955 ஆம் ஆண்டிலும் 1956 ஆம் ஆண்டிலும் திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மாநாட்டின் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற திருமலை யாத்திரைக்கு வடபகுதியில் இருந்து தலைமைதாங்கிச் சென்றார்.

1956 ஆம் ஆண்டு திருகோணமலை மகாநாட்டில் அவரின் தலைமைப்பேருரை அனைவரையும் சிந்திக்கவைத்தது.

'நெருக்கடி மிகுந்த நேரத்தில் என்னைத் தலைவராகச் செய்திருக்கிறீர்கள். தமிழ்பேசும் மக்களின் அரசில் பலத்தைக் குறைப்பதற்கு ஆட்சியாளர் செய்யும் மாற்றுத் தந்திரம் எம் நிலங்களில் சிங்களக் குடியேற்றம் செய்வதே. இவ்வாறு செய்வதால் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மக்களைச் சிறுபான்மையினர் ஆக்கவும் அங்கிருந்து தெரிவுசெய்யப்படும் தமிழ் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டு தமிழருக்கு பாதகமான சட்டங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றமுடியும்.

'தமிழர் பிரதேசங்களில் தமிழர்ஆட்சி செய்தால் சிங்களக் குடியேற்றம் என்ற பேச்சுக்கே இடமில்லை' என்று ஆணித்தரமாக எடுத்துக்கூறினார்.

**சிறை சென்ற செம்மல்**

அரசுக்கு எதிராக நடைபெற்ற சுதந்திரதின எதிர்ப்பு' நடவடிக்கையில் பங்கேற்றார். 'ஸ்ரீ' அழிப்புப் போராட்டத்தில் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

1958ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து தமிழ்த்தலைவர்களோடு கைதுசெய்யப்பட்டு பனாகொடை இராணுவ முகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

தமிழ் ஆங்கில மொழிகளில் சிறந்த பேச்சாளராக, இலக்கியவாதியாக விளங்கிய அமரர் வன்னியசிங்கம் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கமுடியும். 'ஒற்றையாட்சி மூலம்

**இன்று அவரது நினைவுதினம்**

வென்றெடுக்கமுடியாது என்பதில் அசையாத நம்பிக்கைகொண்டவர்'.

அவர் எண்ணம் நிறைவேற உழைப்பதே தமிழ் பேசும் மக்கள் கடமையாகும்.

1956 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 17 ஆம் திகதி இவ்வுலக வாழ்வில் இருந்து நீத்தார். அவர் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

"வளர்க தமிழ் மொழி
வாழ்க தமது ஈழம்"

# தமிழீழ மீட்புநிதி மீளப்பெறுவோர் விவரம் - 2004

யாழ்ப்பாணம், செப்.16

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளப்பெறுவோரில் சங்கானை (ஒரு பகுதி) காரைநகர், பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவுகளில் தெரிவானோர் விவரம் வருமாறு:-

### சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு

ச/ 6506 திருமதி. செல்வம் முருகன்
ச/ 6555 திருமதி. நாகம்மா சிவப்பிரகாசம்
ச/ 6569 திருமதி. சௌபாக்கியலட்சுமி ஜெயரத்தினம்
ச/ 6666 திரு. சிவசம்பு வரதராசா
ச/ 6676 திரு. இளையதம்பி நடராசா
ச/ 6697 திருமதி. வள்ளிநாயகி கந்தசாமி
ச/ 6728 திரு. வேலுப்பிள்ளை இராசதுரை
ச/ 6777 திருமதி. புவனேஸ்வரி புண்ணியமூர்த்தி
ச/ 6801 திருமதி. பொன்னம்மா நடராசா
ச/ 6856 திரு. தர்மலிங்கம் தவக்குமார்
ச/ 6869 திரு. கந்தர் துளசிமாலை
ச/ 6875 திரு. நாகேசு கந்தையா
ச/ 6891 திரு. சுப்பிரமணியம் வீரசிங்கம்
ச/ 6901 திருமதி. இராசம்மா இராசசுந்தரம்
ச/ 6936 திரு. கதிரேசர் அப்புத்துரை
ச/ 6943 திருமதி. விசாலாட்சி வேலுப்பிள்ளை
ச/ 6957 திரு. காசிப்பிள்ளை தங்கராசா
ச/ 7028 திருமதி. தங்கம்மா பொன்னையா
ச/ 7044 திரு. நாகலிங்கம் குமரகுருநாதன்
ச/ 7065 திரு. ஆறுமுகம் சிவலிங்கம்
ச/ 7080 திரு. வேலு கதிர்காமு
ச/ 7090 திரு. பொன்னர் கந்தசாமி
ச/ 7108 திரு. தில்லையம்பலம் தேவராசா
ச/ 7112 திருமதி. இலட்சுமி கந்தன்

### காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு

கா/ 47 திரு. துரைச்சாமி சுப்பிரமணியம்
கா/ 157 திரு. அம்பலவாணர் கணபதிப்பிள்ளை
கா/ 160 திருமதி. நாகேஸ்வரி பொன்னம்பலம்
கா/ 172 திரு. ஆறுமுகம் கந்தையா
கா/ 175 திருமதி. செல்லம்மா திருநாவுக்கரசு
கா/ 201 திருமதி. மகேஸ்வரி இராசதுரை
கா/ 283 திரு. வேலுப்பிள்ளை மாரிமுத்து
கா/ 288 திரு. கனகநாயகம் நல்லதம்பி
கா/ 334 திருமதி. சிவக்கொழுந்து முருகேசப்பிள்ளை
கா/ 402 திரு. பொன்னம்பலம் நடராசா
கா/ 433 திரு. பரமநாதர் சிவராசா
கா/ 472 திரு. வேலு நாகமுத்து
கா/ 490 திரு. விநாசித்தம்பி வேலுப்பிள்ளை
கா/ 502 திரு. கந்தையா ஆறுமுகம்
கா/ 539 திரு. கணபதிப்பிள்ளை குமரகுரு
கா/ 635 திரு. சோமநாதர் அம்பலவாணர்
கா/ 673 திரு. செல்வரத்தினம் செல்வராஜா
கா/ 675 திரு. கனகரத்தினம் இராசரத்தினம்
கா/ 686 திரு. தம்பர் காசிப்பிள்ளை கந்தசாமி
கா/ 735 திருமதி. இராசம்மா விளாசித்தம்பி
கா/ 740 திரு. குழந்தைவேலு இராசலிங்கம்
கா/ 742 திரு. ஐயம்பிள்ளை தம்பிராசா
கா/ 977 திரு. வேலுப்பிள்ளை குமாரசாமி
கா/ 1034 திரு. முருகேசு ஐயம்பிள்ளை
கா/ 1038 திருமதி. பொன்னம்மா வயித்திலிங்கம்
கா/ 1046 திரு. விசுவலிங்கம் வேலாயுதபிள்ளை
கா/ 1070 திரு. சின்னப்பு நவரத்துரை
கா/ 1182 திரு. இராமநாதர் ஆறுமுகம்
கா/ 1188 திருமதி. சரஸ்வதி கதிரவேலு
கா/ 1276 திரு. அம்பலவாணர் கனகசுந்தரம்

### பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு

பரு/ 68 திரு. குமரேசு முருகுப்பிள்ளை
பரு/ 188 திருமதி. யோகாம்பிகை கணபதிப்பிள்ளை
பரு/ 298 திருமதி. பங்கயர்செல்வம் ஈஸ்வரலிங்கம்
பரு/ 453 திருமதி. செல்வராணி சுதந்திரராசா
பரு/ 599 திரு. விநாசித்தம்பி ஆழ்வாப்பிள்ளை
பரு/ 645 திரு. கணபதிப்பிள்ளை நாகலிங்கம்
பரு/ 680 திரு. சின்னத்தம்பி சர்வானந்தம்
பரு/ 682 திரு. மு.சிதம்பரப்பிள்ளை பாலசுப்பிரமணிம்
பரு/ 705 திரு. தம்பு சின்னராசா
பரு/ 730 திரு. தம்பு சந்திரசேகரன்
பரு/ 770 திரு. கணபதிப்பிள்ளை சிறிஸ்கந்தராஜா
பரு/ 872 திரு. கணபதிப்பிள்ளை சின்னையா
பரு/ 954 திரு. மாசிலாமணி முத்துலிங்கம்
பரு/ 995 திரு. கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை
பரு/ 1015 திரு. வேதநாயகம் சிவயோகம்
பரு/ 1025 திரு. கந்தப்பர் சின்னத்தம்பி சிவப்பிரகாசம்
பரு/ 1037 திரு. சதாசிவம் செல்லத்துரை
பரு/ 1048 திரு. ஏகாம்பரநாதன் அருட்செல்வம்
பரு/ 1060 திரு. சின்னத்தம்பி தியாகராசா
பரு/ 1061 திரு. கிட்ணர் சிதம்பரப்பிள்ளை
பரு/ 1062 திருமதி. கமலாசனி சண்முகம்பிள்ளை
பரு/ 1096 திரு. தம்பையா விஸ்வநாதன்
பரு/ 1120 திரு. சின்னப்பு கந்தசாமி
பரு/ 1187 திரு. மணியம் கணபதிப்பிள்ளை
பரு/ 1211 திரு. பாலசிங்கம் சிவகுமாரன்
பரு/ 1258 திரு. சிவப்பிரகாசம் வைகுந்தநாதன்
பரு/ 1299 திரு. சின்னத்தம்பி கந்தசாமி
பரு/ 1311 திரு. பொன்னையா பத்மநாதன்
பரு/ 1314 திரு. சிங்கராசா யோசப்கொன்விக்ரர்
பரு/ 1339 திரு. சின்னத்தம்பி பாலானந்தன்
பரு/ 1341 திரு. கந்தையா சிவப்பிரகாசம்
பரு/ 1343 திரு. கந்தசாமி இராதா
பரு/ 1348 திரு. சின்னையா தணிகாசலம்
பரு/ 1365 திரு. சுப்பிரமணியம் பாலசுந்தரம்
பரு/ 1377 திரு. கந்தையா பொன்னையா
பரு/ 1382 திருமதி. செல்லம்மா கணபதிப்பிள்ளை
பரு/ 1387 திருமதி. சகுந்தலை பாலச்சந்திரன்
பரு/ 1408 திரு. சின்னையா கனகசபை
பரு/ 1417 திரு. இ.சுப்பிரமணியம் இராமநாதன்
பரு/ 1422 திரு. வல்லிபுரம் சின்னத்தம்பி
பரு/ 1428 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
பரு/ 1437 திரு. கணபதிப்பிள்ளை சிவஞானம்
பரு/ 1549 திருமதி. சுந்தரலக்குமி மயில்வாகனம்
பரு/ 1589 திருமதி. எலிசபெத் கிறிஸ்தோப்பர்
பரு/ 1719 திருமதி. பாக்கியம் தம்பையா
பரு/ 1768 திரு. சம்பந்தர்குமாரசாமி கிருஷ்ணசாமி
பரு/ 1797 திரு. மாணிக்கம் நடனசிகாமணி
பரு/ 1804 திரு. பொன்னையா நடராசா
பரு/ 1815 திரு. சூரன் இராசு
பரு/ 1864 திரு. சாம்பசிவம் பாலசிங்கம்
பரு/ 1871 திரு. வீரகத்தி செல்வராஜா
பரு/ 1881 திரு. அருளம்பலம் அம்பலவாணர்
பரு/ 1922 திருமதி. சோதிமலர் சந்திரசேகரம்
பரு/ 2032 திருமதி. நிர்மலாதேவி தேவசிகாமணி
பரு/ 2089 திருமதி. கமலேஸ்வரி கந்தசாமி
பரு/ 2103 திரு. குருசுமுத்து அன்ரனிமரியசீலன்
பரு/ 2150 திரு. வேலுப்பிள்ளை நடராசா
பரு/ 2220 திரு. வேலுப்பிள்ளை வன்னிமரம்
பரு/ 2230 திரு. முத்துலிங்கம் சந்திரலிங்கம்
பரு/ 2233 திருமதி. விறிசீற்றம்மா சூசைப்பிள்ளை
பரு/ 2245 செல்வி. டெய்சி அமிர்தரட்ணம்வல்லிபுரம்
பரு/ 2320 திரு. சாதுலிங்கம் செல்வநாதன்
பரு/ 2329 திரு. கிட்டினபிள்ளை கந்தையா
பரு/ 2358 திருமதி. சாந்தநாயகி சரவணபவன்
பரு/ 2361 திரு. கணபதிப்பிள்ளை செல்லையா
பரு/ 2364 திரு. ஆறுமுகம் வடிவேலு
பரு/ 2493 திரு. முருகுப்பிள்ளை முத்தையா
பரு/ 2527 திருமதி. ஈஸ்வரியம்மாள் சிவஞானசுந்தரம்
பரு/ 2598 திரு. பரமநாதன் சச்சிதானந்தன்
பரு/ 2694 திரு. சுப்பிரமணியம் விநாயகம்பிள்ளை
பரு/ 2722 திரு. செல்வவிநாயகம் விசாகசுந்தரம்
பரு/ 2760 திருமதி. தெய்வானைப்பிள்ளை ரெங்கநாதன்
பரு/ 2777 திரு. அம்பலவி அரியரத்தினம்
பரு/ 2817 திருமதி. பரமேஸ்வரி லோகநாதன்
பரு/ 2828 திருமதி. மண்டலநாயகி சுந்தரலிங்கம்
பரு/ 2832 திரு. நாகரத்தினம் குகன்
பரு/ 2883 திரு. பாக்கியநாதன் யோசேப்
பரு/ 2953 திரு. சின்னத்தம்பி சின்னராசா
பரு/ 2981 திருமதி. செல்வரத்தினம் கனகசபை
பரு/ 2997 திரு. கந்தையா கிருஷ்ணபிள்ளை
பரு/ 3025 திரு. மாணிக்கம் இரத்தினசபாபதி
பரு/ 3036 திரு. பொன்னையா பாலசிங்கம்
பரு/ 3067 திரு. கணபதிப்பிள்ளை கனகசபாபதி
பரு/ 3071 திரு. வல்லிபுரம் கணபதிப்பிள்ளை
பரு/ 3101 திரு. இளையதம்பி சிதம்பரப்பிள்ளை
பரு/ 3135 திரு. சவேதோர் ஆபேல்
பரு/ 3167 திரு. ஏரம்பமூர்த்தி சதாசிவம்
பரு/ 3178 திரு. கிட்டினபிள்ளை விசுவலிங்கம்
பரு/ 3239 திருமதி. நாகரத்தினம் குமாரசாமி
பரு/ 3288 திரு. சின்னக்குட்டி காராளசிங்கம்
பரு/ 3316 திரு. சின்னையா வடிவேலு
பரு/ 3317 திரு. சிதம்பரியார் வல்லிபுரம் இராசமாணிக்கம்
பரு/ 3347 திருமதி. இராசம்மா தியாகராசா
பரு/ 3410 திருமதி. பாறுபதி தாமு
பரு/ 3460 திரு. கணபதிப்பிள்ளை கதிர்காமு
பரு/ 3461 திரு. வேலுப்பிள்ளை அம்பலவி
பரு/ 3485 திருமதி. தனலட்சுமி வேலுப்பிள்ளை
பரு/ 3497 திரு. கணபதிப்பிள்ளை ஏரம்பமூர்த்தி
பரு/ 3498 திரு. ஆறுமுகம் மயில்வாகனம்
பரு/ 3575 திரு. சிதம்பரநாதன் சாம்பசிவம்
பரு/ 3588 திருமதி. இரத்தினம் கந்தசாமி
பரு/ 3619 திரு. தம்பையா நடராசா
பரு/ 3636 திரு. சின்னத்தம்பி கந்தையா
பரு/ 3637 திரு. கதிர்காமு பொன்னுத்துரை
பரு/ 3696 திருமதி. சின்னம்மா நாகராசா
பரு/ 3783 திரு. அருணாசலம் செல்வகதிரமலை
பரு/ 3788 திரு. கதிரிப்பிள்ளை இரத்தினம்
பரு/ 3852 திரு. கிருஷ்ணபிள்ளை அமிர்தலிங்கம்
பரு/ 3864 திரு. சின்னத்துரை குலசேகரம்
பரு/ 3867 திருமதி. இலட்சுமிப்பிள்ளை ஆறுமுகம்
பரு/ 3901 திரு. மாப்பாணர் கந்தசாமி
பரு/ 3936 திரு. அம்பலவி அரியரட்ணம்
பரு/ 3968 திரு. வேலுப்பிள்ளை ஆறுமுகம்
பரு/ 4048 திரு. சின்னையா சிவராசா
பரு/ 4152 திரு. சுப்பிரமணியம் இராமகிருஷ்ணர்
பரு/ 4158 திரு. வல்லிபுரம் தம்பிப்பிள்ளை
பரு/ 4214 திருமதி. பரமேஸ்வரி கதிர்காமநாதன்
பரு/ 4269 திருமதி. நவமணி குழந்தைவேற்பிள்ளை
பரு/ 4308 திரு. இராமலிங்கம் கனகசேகரம்
பரு/ 4331 திரு. கணபதிப்பிள்ளை கந்தசாமி
பரு/ 4368 திரு. சுப்பிரமணியம் மாணிக்கம்
பரு/ 4370 திரு. தாமோதரம்பிள்ளை செகராசசிங்கம்
பரு/ 4372 திரு. ஆழ்வாப்பிள்ளை சிவப்பிரகாசம்
பரு/ 4400 திரு. மாணிக்கம் முருகுப்பிள்ளை
பரு/ 4505 திரு. கதிரிப்பிள்ளை துரைராசா
பரு/ 4530 திரு. விசாகப்பெருமாள் ஐயாமுத்து
பரு/ 4545 திருமதி. மகேந்திராணி இராசதுரை
பரு/ 4589 திரு. சரவணமுத்து சக்திவேல்
பரு/ 4676 திரு. இராமசாமி மகாதேவா
பரு/ 4766 திரு. தனிஸ்லாஸ் அந்தோனி எனிஸ்டன்
பரு/ 4818 திரு. பஞ்சவர்ணம் முருகதாஸ்
பரு/ 4996 திரு. இராசரத்தினம் சிறீஸ்கந்தராசா
பரு/ 5003 திரு. கந்தவனம் கணபதிப்பிள்ளை
பரு/ 5039 திருமதி. சந்தானலட்சுமி பஞ்சாட்சரம்
பரு/ 5046 திரு. கந்தன் அந்தோனிப்பிள்ளை
பரு/ 5047 செல்வி. அமிர்தகுலபாஞ்சாலி
அருட்செல்வநாயகம்
பரு/ 5062 திரு. சிதம்பரப்பிள்ளை வைரமுத்து
பரு/ 5085 திரு. முருகுப்பிள்ளை விசுவலிங்கம்
பரு/ 5120 திருமதி. அம்பிகைநாச்சி சுப்பிரமணியம்
பரு/ 5121 திருமதி. பாறுபதிப்பிள்ளை செல்லையா
பரு/ 5125 திரு. சின்னராசா சுப்பிரமணியம்
பரு/ 5151 திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
பரு/ 5177 திருமதி. கமலரத்தினம் கார்த்திகேசு
பரு/ 5226 திரு. சுப்பர் கணபதிப்பிள்ளை
பரு/ 5233 திரு. ஆண்டி பொன்னன்
பரு/ 5247 திருமதி. பாலமணி சீவரெத்தினம்
பரு/ 5306 திரு. ஜேம்ஸ் வைரவப்பிள்ளை
பரு/ 5310 திருமதி. பூரத்தினம் சாந்தரத்தினம்
பரு/ 5337 திருமதி. செல்வரத்தினம் அருமைராசா
பரு/ 5398 செல்வி. ஞானேஸ்வரி சின்னத்துரை
பரு/ 5474 திருமதி. தில்லையம்மா கந்தசாமி
பரு/ 5542 திரு. ஞானப்பிரகாசம் சாள்ஸ்
பரு/ 5546 திரு. நாகலிங்கம் சோமசுந்தரம்
பரு/ 5560 திருமதி. மகேஸ்வரி விநாயகமூர்த்தி
பரு/ 5603 திரு. முருகேசம்பிள்ளை மகாலிங்கம்
பரு/ 5613 திரு. செல்லையா இராசதுரை
பரு/ 5614 திரு. கணபதி நமசிவாயம்
பரு/ 5617 திரு. வல்லிபுரம் சுப்பிரமணியம்
பரு/ 5664 திருமதி. முத்தம்மா பிரான்சிஸ்கோ பிலிப்
பரு/ 5719 திரு. மயில்வாகனம் விஜயரட்ணம்
பரு/ 5724 திரு. குமாரசாமி கதிர்காமத்தம்பி
பரு/ 5749 திரு. பொன்னம்பலம் தியாகராசா
பரு/ 5750 திருமதி. மீனாட்சிப்பிள்ளை தருமலிங்கம்
பரு/ 5827 திரு. மாரிமுத்து இராசரெத்தினம்
பரு/ 5853 திருமதி. கலாராணி வரதராசா
பரு/ 5873 திருமதி. தெய்வானைக்கண்டு கன்கசபை
பரு/ 5875 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
பரு/ 5891 திரு. கதிரிப்பிள்ளை பொன்னையா
பரு/ 6082 திரு. வாரித்தம்பி தங்கராசா
பரு/ 6086 திரு. பாலசுப்பிரமணியம் சதாசிவம்
பரு/ 6093 திருமதி. இரத்தினம் குகதாஸ்
பரு/ 6102 திருமதி. கலைச்செல்வி செல்வானந்தம்
பரு/ 6137 திரு. அருணாசலம் இரத்தினசபாபதி
பரு/ 6151 திரு. வேலும்மயிலும் சிவகுருநாதன்
பரு/ 6167 திருமதி. பொன்னம்மா பொன்னுத்துரை
பரு/ 6186 திரு. கெங்காதரன் இளையதம்பி
பரு/ 6195 திருமதி. நல்லம்மா நமசிவாயம்
பரு/ 6218 திரு. மாதர் வேலும்மயிலும்
பரு/ 6257 திருமதி. தையல்முத்து இராமசாமி
பரு/ 6269 திரு. மயில்வாகனம் வைத்தியலிங்கம்
பரு/ 6318 திருமதி. நீலாதேவி நாராயணசாமி
பரு/ 6354 திரு. நடராசா மோகனதாஸ்
பரு/ 6361 திருமதி. ஜெயராணி செல்வலிங்கம்
பரு/ 6375 திரு. செல்லத்துரை புவனேஸ்வராசா
பரு/ 6467 திரு. வீரகத்தி கிருஷ்ணபிள்ளை
பரு/ 6534 செல்வி. மகிழினி சரவணபவானந்தன்
பரு/ 6539 திருமதி. சுபாசினி கிருஷ்ணகுரு
பரு/ 6540 திரு. கணபதிப்பிள்ளை சதாசிவம்
பரு/ 6557 திரு. இரத்தினசிங்கம் இராமமூர்த்தி
பரு/ 6695 திருமதி. பாக்கியலட்சுமி கிருஷ்ணபிள்ளை
பரு/ 6747 திரு. பொன்னுத்துரை இரத்தினசிங்கம்
பரு/ 6812 திரு. வேலப்பர் முருகேசு
பரு/ 6816 திரு. சின்னையா தியாகராசா
பரு/ 6863 திருமதி. சிவகாமிப்பிள்ளை கந்தையா
பரு/ 6872 திருமதி. சின்னம்மா சுப்பிரமணியம்

### வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு

வ.கி/ 70 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
வ.கி/ 122 திரு. கந்தையா சிவஞானம்
வ.கி/ 175 திரு. வேலுப்பிள்ளை ஐயம்பிள்ளை
வ.கி/ 193 திரு. இராசையா ஜீவரட்ணம்
வ.கி/ 205 திரு. சபாபதிப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை
வ.கி/ 222 திரு. மரியாம்பிள்ளை றூபேட்மரியதாஸ்
வ.கி/ 292 திரு. செபமாலை இராயப்பு
வ.கி/ 510 திரு. முருகேசு கணபதிப்பிள்ளை
வ.கி/ 544 திரு. நடராசா ஜெயராசா
வ.கி/ 556 திரு. கபிரிகேல் ஆசீர்பாதம்
வ.கி/ 557 திரு. தேவசகாயம் திரேஸ்புஸ்பம்
வ.கி/ 570 திரு. சந்தியாப்பிள்ளை கஸ்மீர்
வ.கி/ 658 திரு. சின்னத்தம்பி குலசிங்கம்
வ.கி/ 722 திருமதி. மேரிமெக்டனிக் ஆனந்தராஜா
வ.கி/ 823 திரு. முருகேசு சதாசிவம் வல்லிபுரநாதர்
வ.கி/ 864 திரு. சின்னத்தம்பி வீரசிங்கம்
வ.கி/ 891 திரு. மயில்வாகனம் திருநாமம்
வ.கி/ 939 செல்வி. அன்னலட்சுமி கந்தசாமி
வ.கி/ 971 திருமதி. றோஸ்மேரிறெயினா
எட்வேட்அரியநாயகம்
வ.கி/ 1005 திரு. சின்னர் கணபதிப்பிள்ளை
வ.கி/ 1009 திருமதி. ஜெயராணி சௌந்தரராசா
வ.கி/ 1022 திரு. சபாபதிப்பிள்ளை முத்தையா
வ.கி/ 1075 திரு. சிற்றம்பலம் பரமசிவம்
வ.கி/ 1084 திரு. மயில்வாகனம் பசுபதி
வ.கி/ 1089 திரு. பாக்கியநாதன் புவனேந்திரன்
வ.கி/ 1104 திரு. கணபதிப்பிள்ளை வடிவேலு
வ.கி/ 1159 திரு. சின்னையா கதிர்காமு
வ.கி/ 1217 திருமதி. அந்தோனியாமரியீட்டா ஜெயசீலன்
வ.கி/ 1243 திரு. முருகேசு விநாசித்தம்பி
வ.கி/ 1421 திரு. தம்பையா நாகமுத்து

### பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு

ப/ 35 திருமதி. தேவராணி தவராசா
ப/ 144 திரு. கனகசபை வன்னியசிங்கம்
ப/ 218 திரு. கந்தையா செல்வரத்தினம்
ப/ 340 திருமதி. கமலாதேவி சுப்பிரமணியம்
ப/ 346 திரு. அந்திரேஸ் வஸ்தியாம்பிள்ளை
ப/ 380 திருமதி. வள்ளிப்பிள்ளை இளையதம்பி
ப/ 400 திருமதி. பாறுவதி வயித்திலிங்கம்
ப/ 468 திரு. நாகமுத்து சின்னத்தம்பி
ப/ 570 திரு. கந்தையா தங்கவடிவேல்
ப/ 707 திரு. பிலிப்பு யாக்கோப்பு
ப/ 714 திருமதி. மூக்கிறட் பேதுறு
ப/ 730 திரு. சின்னப்பொடியர் கணபதிப்பிள்ளை
ப/ 741 திரு. கிட்டினன் சந்திரசேகரம்
ப/ 778 திரு. சிவக்கொழுந்து சிவஞானசுந்தரம்
ப/ 854 திரு. கந்தசாமி நவரத்தினசாமி
ப/ 873 திருமதி. மரியம்மா மரியாம்பிள்ளை
ப/ 879 செல்வி. சிவனேஸ்வரி பொன்னுத்துரை
ப/ 887 திரு. சின்னத்தம்பு தர்மராசா
ப/ 966 திருமதி. தம்பு வள்ளிப்பிள்ளை

(வளரும்)

# க.பொ.த. சாதாரணதர மாதிரி வினாத்தாள்

# விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்

**பகுதி I** ஒரு மணித்தியாலம்

தயாரித்தவர்: வெ.ஜெகதீஸ்வரன்

01. பின்வருவனவற்றுள் உயிரிரசாயன ஊக்கியாகத் தொழிற்படுவது எது?
(1) மோல்ட்டோசு (2) இன்சுலின் (3) இலிப்பேசு (4) அதிரனலின்

02. இயற்கையிலேயே சேர்வையாகக் காணப்படக்கூடியது
(1) இரசம் (2) சோடியம் (3) பிளாற்றினம் (4) வெள்ளி

03. சாதாரண சுகதேகி மனிதனின் தளர்வுக் குருதி அமுக்கம்
(1) 120-80 mmHg (2) 110-130 mmHg
(3) 70-90 mmHg (4) 80-120 mmHg

04. தாவரத்தின் சாற்றேற்றத்துடன் நெருங்கிய தொடர்புடையது
(1) வளிமண்டல ஈரப்பதன் (2) வளிமண்டல வெப்பநிலை
(3) வேரமுக்கம் (4) காற்றோட்டம்


05. ஓர் ஒளியியற் கருவியின் முன்னால் பொருள் ஒன்று வைக்கப்படும் பொழுது அதன் விம்பம் பொருளிருக்கும் பக்கத்தில் உருச் சிறுத்ததாகவும் நிமிர்ந்ததாகவும் பெறப்படின் அந்த ஒளியியற்கருவி
(1) குவிவு ஆடி (2) குழிவு ஆடி
(3) குவிவு வில்லை (4) குழிவு வில்லை

06. பின்வருவனவற்றில் எவை வெப்பமேற்றும்போது வாயு விளைவுகளைத் தரக்கூடியவை
(a) $NaNO_3$ (b) $Cu(NO_3)_2$ (c) $CaCO_3$ (d) $KMnO_4$ (e) $LiNO_3$
(1) a, b (2) b, e (3) b, c, d (4) a, b, c, e

07. $Nkg^{1}$ இற்கு நிகரான அலகாகப் பின்வருவனவற்றுள் எதனை எடுக்க முடியும்.
(1) m (2) J (3) $Nm^{-2}$ (4) $ms^{-2}$

08. தாழ்வகைத் தாவரங்களில் வித்துப்போலி முட்டையை நோக்கி அசைதல்
(1) இரசனை அசைவு (2) முன்னிலை அசைவு
(3) திருப்ப அசைவு (4) புவித்திருப்ப அசைவு

09.




கோல்கள் PQ, RS சமனிலையில் காணப்படுகின்றது. இதனடிப்படையில் அவற்றின் திணிவுகளிற்கிடையிலான தொடர்பு
(1) A=B=C (2) A>B>C (3) B>C>A (4) C>B>A

10. அலுமினியத்தின் சல்பேற்றின் சூத்திரம் $Al_2(SO_4)_3$ எனின் Mg சல்பேற்றின் சூத்திரம்
(1) $Mg_2(SO_4)_3$ (2) $Mg SO_4$ (3) $Mg_2SO_4$ (4) $Mg(SO_4)_2$

11. வெப்பக் கொள்ளளவின் அலகாக அமையக்கூடியது
(1) $J^oC^{-1}$ (2) $J Kg^{-1o}C^{-1}$ (3) $^oC$ (4) $JKg^{-1}$

12. ஓர் இசைக் கருவியின் சுருதி அதிகரிக்கும்போது பிறப்பிக்கப்படும் அலையின்
(1) அலை நீளம் அதிகரிக்கும் (2) முடிகளிற்கிடையிலான தூரம் அதிகரிக்கும்
(3) அலையின் வீச்சம் அதிகரிக்கும் (4) தாழிகளிற்கிடையிலான தூரம் குறைவடையும்

13. நரம்பிணைப்புப் பகுதியில் நரம்பு முளைகளிற்கிடையில் தொழிற்பாட்டு ரீதியில் தொடர்பினை ஏற்படுத்துவது
(1) அதிரனலீன் (2) அசற்றைல் கோலின் (3) இன்சுலின் (4) தைரொட்சீன்

14. பொசுபேற்று உரத் தயாரிப்பிற்கு பயன்படும் பதார்த்தம்
(1) களிமண் (2) தொலமைற் (3) அப்பற்றைற் (4) சுண்ணாம்பு

15. உலக சனத்தொகையில் செல்வாக்குச் செலுத்தாத காரணி எது?
(1) பிறப்பு வீதம் (2) குடியகழவு (3) இறப்பு வீதம் 4) மேற்கூறியயாவும் சரி

16. குறைந்த மின்னழுத்த வேறுபாட்டில் தொழிற்படும் ஒளிகாலும் இருவாயியின் நிறம்
(1) சிவப்பு (2) மஞ்சள் (3) பச்சை (4) மூன்றும் சரி

17. பல்பகுதியம் அல்லாதது
(1) குளுக்கோசு (2) PVC (3) கிளைகோஜன் (4) புரதம்


18. காந்தப் புலத்தினுள் அசையும் கடத்தியில் காட்டப்படும் மின்னோட்டத்தின் பருமன் மாற்றமடைவது
(1) கடத்தி அசையும் வேகம் (2) காந்தவலிமை
(3) கடத்தி அசையும் திசை (4) 1உம், 2உம் சரி

19. நைதரசனைக் கொண்ட பதார்த்தம் எது?
(1) மெழுகு (2) நைலோன் (3) **PVC** (4) பருத்தித்துண்டு

20. வளிமண்டல அமுக்கம் பின்வருவனவற்றில் எதற்குச் சமனாகும்.
(1) 76 cmHg (2) 1013 மில்லிபார் (3) $10^5$ பஸ்கால் (4) யாவும் சரி

21. புலன் நரம்பின் தொழில்
(1) மூளையிலிருந்து தசைகளுக்கு கணத்தாக்கத்தைக் கொண்டு செல்லல்
(2) புலன் அங்கங்களிலிருந்து மைய நரம்புத் தொகுதிக்குக் கணத்தாக்கத்தைக் கொண்டு செல்லல்
(3) தெறிவில்லில் மாத்திரம் பங்குபற்றல்
(4) மூளையிலிருந்து முண்ணானுக்கு மாத்திரம் கணத்தாக்கங்களைக் கொண்டுசெல்லல்

☆ **22 முதல் 24 வரையான வினாக்களிற்குப் பின்வரும் மின்சுற்றினைப் பயன்படுத்தி விடை தருக.**




22. ஆளி $S_1$ மூடியதும் சுற்றின் விளையுள் தடையின் பருமன்
(1) 10Ω (2) 12Ω (3) 16Ω (4) 6Ω


23. ஆளி $S_1$ முடியதும் $A_1$ மானியின் வாசிப்பு யாது?
(1) 3.6 A (2) 9 A (3) 3A (4) O

24. சுற்றில் ஆளி $S_1$ மூடியதும் ஒளிரும் LED எது?
(1) $D_1$ (2) $D_2$ (3) $D_1$,$D_2$ (4) எதுவுமல்ல

25. ஒரு குறுக்கலையின் அடுத்துள்ள இரு முடிகளிற்கிடையிலான தூரம் 2m ஆகும். 3 செக்கனில் 30 முடிகளும் 30 தாழிகளும் உருவாக்கப்படின் அலையின் வேகம்
(1) $0.2ms^{-1}$ (2) $2ms^{-1}$ (3) $20ms^{-1}$ (4) $200ms^{-1}$

26. 760w பெறுமானமுடைய மின்னழுத்தியினால் 5 நிமிடத்துக்கு ஆடை ஒன்றை அழுத்தும்போது செலவடையும் சக்தியின் அளவு
(1) 225KJ (2) 252KJ (3) 520KJ (4) 525KJ

**27 முதல் 30 வரையான வினாக்களிற்குப் பின்வரும் ஆவர்த்தன அட்டவணையைப் பயன்படுத்துக.**




27. பரபினுள் இட்டுப் பாதுகாக்கப்படும் மூலகம் எது?
(1) A (2) B (3) C (4) D

28. தாக்குதிறன் குறைந்த மூலகம் எது?
(1) B (2) D (3) E (4) H

29. D ஆனது E உடன் சேர்ந்து உருவாக்கும் பிணைப்பின் தன்மை
(1) அயன் பிணைப்பு (2) பங்கீட்டு வலுப்பிணைப்பு.
(3) ஈதல் பங்கீட்டு வலுப்பிணைப்பு (4) கூறமுடியாது

30. கூடிய அயனாக்க சக்தியைக் கொண்ட வேகம் எது?
(1) A (2) B (3) D (4) H

31. மளமளப்புத்தசை காணப்படும் இடம்
(1) இதயம் (2) இருதலைத் தசை
(3) கருப்பையின் உட்புறச் சுவர் (4) முத்தலைத் தசை


32. சீரான வேகத்தில் இயங்கும்போது பார ஊர்தி ஒன்றினுள் தொங்கவிடப்பட்ட ஓர் இரும்புக்குண்டு படம் I இல் காட்டியவாறு காணப்பட்டது. சிறிது நேரத்தில் படம் IIஇல் காட்டியவாறு காணப்படின் பார ஊர்தியானது



படம் I படம் II

(1) சீரான வேகத்தில் இயங்குகின்றது (2)அமர்முடுகலுடன் இயங்குகின்றது
(3) ஆர்முடுகலுடன் இயங்குகின்றது (4) ஓய்விலுள்ளது

33. ஈர்ப்பு விசையற்ற ஓரிடத்தில் படத்தில் காட்டியவாறு ஒரு நீர்ப்பாத்திரம் காணப்படின் அதில் A,B,C எனும் 3 துவாரங்கள் இடப்படின் பின்வருவன வற்றில் எதனை அவதானிப்பீர்.




34. உடலில் "அமைனகற்றல்" தாக்கம் நடைபெறும் இடம் எது?
(1) இதயம் (2) சிறுகுடல் (3) இரைப்பை (4) ஈரல்

35. வீட்டு மின்சுற்றில் பயன்படுத்தப்படும் ஆடலோட்ட மின்னின் அதிர்வெண், அழுத்த வேறுபாடு முறையே தருவது?
(1) 230V, 100 Hz (2) 100Hz, 230V
(3) 50Hz, 230V (4) 230V, 50Hz

36. தன்நிறமூர்த்த எண்ணிக்கை மாறுபடுவதால் ஏற்படும் குறைபாட்டு நோய் எது?
(1) ரேணனின் சகசம் (2) டவுணின் சகசம்
(3) கிளைன் பில்றறின் சகசம் (4) அரிவாட்கல அனீமியா

37. மீடிறன் மட்டிசைப்பு முறையில் ரேடியோ ஒலிபரப்பிற்காகப் பயன்படுத்தப்படும் மின்காந்த அலைவரிசையின் வீச்சு
(1) 88 MHz - 108 MHz (2) 88 KHz - 108 KHz
(3) 88 Hz - 108 Hz (4) 88 MHz - 108 KHz

38. 3ஆம் வகை நெம்பில் சுமை, சுழலிடம், எத்தனம் காணப்படக்கூடிய ஒழுங்கு எது?
(1) சுமை, சுழலிடம், எத்தனம் (2) சுழலிடம், சுமை, எத்தனம்
(3) சுமை, எத்தனம், சுழலிடம் (4) கூறமுடியாது

39. நுணுக்குக் காட்டியின் மூலம் முதலில் கருவைக் கண்டறிந்தவர்
(1) ஜோன்சன் (2) றொபேட் குக் (3) றொபேட் பிறவுன் (4) டார்வின்

40. இம்மாதம் வீசிய "பிரான்சிஸ்" எனும் சூறாவளியால் பாதிப்படைந்துள்ள புளோரிடா மாநிலம் அடங்கிய நாடு?
(1) இந்தியா (2) சீனா (3) ஜப்பான் (4) அமெரிக்கா

## மல்லாகம் பழம்பதி விநாயகர் தேவஸ்தானம்

## பூங்காவனத் திருவிழா

இன்று (16-09-2004) வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு விசேடபூஜை இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வரும் நிகழ்வுகள் இடம்பெறும்.

*விஷேட நிகழ்ச்சிகளாக:*

☆ *தவில் கச்சேரி*
நித்தியானந்தன் குழுவினர், சின்னராசா புதல்வர்கள்
S.பாலமுருகன் - ஈழநல்லூர் (நாதஸ்வரம்)

☆ *வயலின் கச்சேரி:*
S.சற்குருநாதன் குழுவினர்

☆ *இன்னிசை கானங்கள்*
சாரங்கா இசைக்குழுவினர்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(36425) (26-34-14) - விழா உபயகாரர்கள்

## புலமைப்பரிசிலுக்குத் தெரிவான மாணவர் விவரம்

சாவகச்சேரி,செப்.16

10 ஆயிரம் மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி வலயப் பகுதியில் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ சாதாரணதரம், உயர்தரம் ஆகியவற்றைச் சேர்ந்த 61 மாணவர்கள் இத்திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை உடனடியாகத் தமது கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ செல்வராசா தெரிவித்துள்ளார். (8-31)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பனும் எம் வகுப்புத் தலைவனுமாகிய
செல்வன் சி.யசிந்திரனின் தந்தையார்

**அமரர் செல்லத்துரை சிவகுமார்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் எம் நண்பனுக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

The Express Institute
Irupalai, Kopay.

தரம் 11
மாணவர்கள்.

(36432) (26-34-14)

## 13 ஆம் ஆண்டு நினைவலைகள்

*வீரப்பிறப்பு*
25 – 07 – 1976



*வீரச்சாவு*
16 – 09 – 1991

**வீரவேங்கை கல்கத்/கிருஷாந்**

**மார்கண்டு மதனரூபன்**

(யாழ். இந்துக் கல்லூரி மாணவன்)

ஆண்டுகள் பதின்மூன்றாகி விட்ட போதும்
அழியாத நினைவுகளுடன் குமுறுகின்றோம்
பலகளம் கண்ட புலி வீரனே
இன்னும் பலகாலம் வரை நிலை - கொள்ளும்
உன் தியாகம்.

என்றென்றும் உன் நினைவுகளுடன்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள் (கவிஸ்),
மாமா குடும்பம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(36383)(42-34-13-24)


## WANTED

1. Sales Representatives
2. Bill Clerks
3. Office Assistants (Female)
4. Technicians

Contact:
**M.C.B. Pvt.Ltd**
No.74, Kannathiddy Rd,
Jaffna
(36431) T.P.:222 - 6449



## REPAIRS




UPS◆
Printers◆
Monitors◆
Scanners◆
Power supply◆

MICRO PC SYSTEMS

யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536


## அறிவித்தல

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 8A என வரிமதிப்பிலக்கம் கொண்டதும் 07.04.87 இல் உத்தரவுபெற்ற நில அளவையாளர் K.திருஞானசம்பந்தர் தயாரித்த 737 இல் இலக்கப் படத்தில் விலக்கிக்கொள்ளப்பட்டதும் 'ஸ்பெஷல் என்ஜினியர்ஸ்' என்னும் வர்த்தகப் பெயரில் இயந்திராதிகள் திருத்தும் நிலையம் நடத்திவரப்படுவதுமான 3.86 குளி விஸ்தீரணம் கொண்ட கடைக்கட்டடமும் குறித்த வியாபாரமும் தம்பிப்பிள்ளை மூர்த்தி என்பவருக்கே சொந்தமும் உரிமையுமானதென்றும் குறித்த கடைக்கட்டடத்திற்கு வடகிழககேயுள்ள குறித்த அளவு படத்தில் முதலாம் துண்டாகக் காட்டப்பட்டுள்ள ஆதனத்தின் சொந்தக்காரர் என உரிமை கோருவோர், குறித்த கடைக்கட்டடத்துக்கும் பொய்யுரிமை பாராட்டி அதையும் விற்பனைசெய்ய முயற்சிக்கிறார்கள். ஆகையால், இத்தால் சகலருமறிய வேணடியது யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி 8A என வரிமதிப்பிலக்கம் கொண்ட கடைக்கட்டடத்தை எவரும் அறுதி கொள்ளவேண்டாமென்று இத்தால் எச்சரிக்கை செய்யப்படுவதுடன், யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் குறித்த கடைக்கட்டடம் சம்பந்தமான வழக்கு நடைபெற்று வருகின்றது என்பதையும் அறிந்துகொள்ளுமாறும் வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

**தம்பிப்பிள்ளை மூர்த்தி,**
**ஸ்பெஷல் என்ஜினியர்ஸ்,**
8A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(36427)(34-14)


சூரியன் கேட்டால்

# ரூபா. 50,000

நாள்தோறும். காலை 07.00 முதல் காலை 10.00 வரை.

சூரியன FM
SOORIYAN FM

93.0 FM
யாழ்ப்பாணம்

A member of the ABC Radio Network

LEO BURNETT

103.2 கொழும்பு / தெற்கு 93.0 யாழ்ப்பாணம் 97.3 கண்டி / ரஜரட்ட 97.9 நாடு முழுவதும்.

## இ.தொ.காவின் எம்.பியான வடிவேல் சுரேஷின் 'கண்டுபிடிப்பு' இது

# போராடப் புறப்பட்டதால் வடக்கு - கிழக்குத் தமிழர் இன்று நாடு நாடாக அகதிகளாக அலைகின்றனர்!

## புத்திசாதுரியமாக நடந்ததால் மலையகத்தவருக்கு அந்நிலைமை இல்லையாம்

சக்தி தொலைக்காட்சியில் கடந்த ஞாயிறன்று மாலை 6 மணிக்கு ஒளிபரப்பாகிய 'மின்னல்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன், இ.தொ.காவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ், எஸ். ஜெகதீஸ்வரன், மலையக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி. இராதாகிருஷ்ணன் ஆகியோர் வெளியிட்ட கருத்துக்கள் தொடராக தரப்படுகின்றன.

### வடிவேல் சுரேஷ்

வடிவேல் சுரேஷ் இந்நிகழ்ச்சியில் பேசுகையில் தெரிவித்ததாவது:-

இ.தொ.காவின் உயர் சபையான தேசிய சபையின் அங்கீகாரத்தின்படி தலைவர் ஆறுமுகம் தொண்டமான் எமது மலையக மக்களோடு கலந்தாலோசித்து, பின்னர், எடுத்த முடிவே ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு நிபந்தனையற்ற வகையில் ஆதரவு வழங்கும் தீர்மானம். எமது தலைவரின் தீர்மானம் எப்போதும் எமது மலையக மக்களின் நலன் சார்ந்ததாகவே இருக்கும்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினையால் நாட்டில் முழு அபிவிருத்திப் பணிகளும் முடக்கப்பட்டுள்ளன. இதனால், எமது மலையக மக்களும் பாதிப்படைகின்றனர். இப்போதுள்ள தொங்கு அரசால் தீர்க்கமான முடிவுகளை எடுக்க முடியாதுள்ளது. ஆகவே, இ.தொ.கா. ஆதரவு வழங்கி அரசை ஸ்திரப்படுத்தி, சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலம் அபிவிருத்திப் பணிகள் நடைபெறும். இதில் எமது மக்களும் நன்மையடைவர். இக் காரணங்களினாலேயே எமது கட்சி ஐ.ம.சு. கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளது.

பத்திரிகைகள் இ.தொ.காவையும் தலைவர், ஆறுமுகன் தொண்டமானையும் பிழையான முறையில் விமர்சித்து செய்திகள் வெளியிட்டு வருகின்றன. இது குறித்து நாங்கள் கவலை கொள்ளவில்லை. சந்தோஷப்படுகின்றோம் . காய்க்கின்ற மரத்திற்குத்தான் கல்லடி வரும் என்பது போல நல்லவர்களுக்குத்தான் சோதனை வரும்.

நாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மலையக மக்களின் எதிர்காலத்தைப் பற்றி நாங்கள் யோசிக்கின்றோம். (ஈழவேந்தனைப் பார்த்து) அன்று நீங்கள் வடக்கு கிழக்கில் அவசரப்பட்டு போர்ச்சூழலை உருவாக்கியதைப் போல் எமது மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானும் அவசரப்பட்டிருந்தால் எங்கள் நிலை என்னவாயிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

அப்பாவித் தமிழ் மக்கள் இன்று உலகின் நாலாதிசைகளிலும் அகதிகளாக - அகதி முகாம்களில் - வாழ்வதைப் போன்ற நிலைமைதான் மலையக மக்களுக்கும் ஏற்பட்டிருக்கும்.

நாங்கள் எங்கள் மக்களைப் பற்றி யோசிக்கிறோம். மலையகத்தின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கிறோம்.

வடக்கு - கிழக்குப் போன்று தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானும் அவசரப்பட்டு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தால் நாங்களும் நிலைகுழம்பிப்போயிருப்போம்.

வடக்கு - கிழக்கில் உள்ள மக்கள் பாவம், அப்பாவி மக்கள் நாலாபுறமும் சிதறுண்டுபோய் இருக்கிறார்கள். கனடா, சுவிஸ், இந்தியா என்று பல இடங்களில் அகதிமுகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இன்றைக்கு அந்த மக்களுக்கு ஒரு சுமுகவாழ்வு இல்லை.

இன்றைக்குப் பேச்சு நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். எதற்கு?

இருந்த இடத்தில் மீண்டும்போய் மீள் குடியமர்ந்து வாழ்வதற்கு பேச்சு நடத்திக்கொண்டிருக்கின்றார்கள்.

எமது மக்களுக்கு ஒரு கஷ்டம் என்றால் அன்று தொடக்கம் இன்றுவரை குரல்கொடுத்து வருபவர்கள் தொண்டமான் குடும்பத்தினரே.

மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றேன். நாட்டில் சமாதானம் வரவேண்டும். அதற்கான பேச்சு இடம்பெறவேண்டும். அதற்கு ஆளுங்கட்சிக்குப் பலம்வேண்டும். இதனை வழங்கவே நாங்கள் ஐ.ம.சு, கூட்டமைப்போடு கூட்டுச்சேர்ந்தோம், நாங்கள் இணைவதற்கான பிரதான காரணம் சமாதானப் பேச்சுகள் எந்தத் தடங்கலுமின்றி முன்னெடுக்கப்படவேண்டும் என்பதேயாகும் என்றார்.

### ஈழவேந்தன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் கூறியதாவது:-

நான் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் சென்றது எனக்குக் கிடைத்த பெரும் வெற்றி என சுரேஷ் நகைப்புக் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

என்னுடைய ஆழ்ந்த நீண்ட அரசியல் அனுபவத்தை தமிழினத்திற்கு பயன்படுத்தவேண்டும் என்று வே.பிரபாகரன் அளித்த தீர்ப்பின் விளைவுதான் நான் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்தில் பிரவேசித்தமை.

மலையக மக்களின் ஏகோபித்த தலைவர் என்று கூறிக்கொண்ட தொண்டமான் காலத்திற்குக் காலம் அரசமைக்கும் கட்சிகளோடே இணைந்து செயற்பட்டு வந்தார். சில சலுகைகளைப் பெறவேண்டும் என்பதற்காக இவ்வாறு அவர் செயற்பட்டார். இது குறித்து நான் அடிக்கடி அவருக்குச் கூறியிருக்கிறேன்.

கெஞ்சிச் சலுகைகளைப் பெறவேண்டாம். உரிமைகளைக் கேட்டுப்பெறுங்கள் என்று சொல்வேன். அவருக்கு அப்போது புரியவில்லை மரணிக்கும் தருவாயில்தான் அது அவருக்கு விளங்கியது. அதை அவர் என்னிடம் ஒப்புக் கொண்டார்.

மலையக மக்களுக்கு ஓர் அரசியல் காப்புறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதை காலங்கடந்தாவது தொண்டமான் உணர்ந்திருந்தார். ஆனால், இப்போதைய தலைவர் ஆறுமுகம் தொண்டமானிடம் அந்தச் சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை.

மறைந்த தலைவர் தொண்டமானிடம் நான் ஈழத்தமிழர்களின் போராட்டத்தில் மலையக மக்களும் இணைந்து பங்காற்றவேண்டும் எனக் கேட்டிருந்தேன். மலையக மக்கள் வெறும் பலிக்கடாக்களாகுவதை நான் விரும்பவில்லை. அதனாலேயே இக்கருத்தை அவரிடம் சொன்னேன்.

ஆறுமுகன் தொண்டமானிடம் சிறந்த தலைமைத்துவப் பண்புகள் இல்லை. பல நாள்கள் அவரை நாட்டில் காணக்கிடைப்பதேயில்லை. தனிமனித வட்டத்தைச் சுற்றி இயக்கம் வளர முடியாது. எந்தத் தலைவனுக்கும் ஒரு கொள்கை, கோட்பாடு, தொலைநோக்கு என்பன இருக்கவேண்டும். 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது அஞ்சல் அறிவார். தொழில அறிவுடையவர் ஆவது அறிவார். அறிவார் அறிவிலர் அஃது அறிவிலாதவர்.' அந்த ஆவது அறிகின்ற மருந்தாகும் தன்மை ஆறுமுகன் தொண்டமானிடம் இல்லை.

இ.தொ.காவுக்கு அரசியல் ஞானம் இருந்தால் எம்மைத் திட்டமிட்டு அழிக்கின்ற அரசோடு அது எப்படி அரவணைத்துக் கொள்ள முடியும்? எவ்வாறு அவர்களை ஆதரிக்கமுடியும்? - என்றார்.

### இராதாகிருஷ்ணன்

மலையக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.இராதாகிருஷ்ணன் பேசுகையில் கூறியதாவது:-

மலையகத்தில் பெ.சந்திரசேகரனும் ஒரு மாபெரும் தலைவர்தான். அவரும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர். தொண்டமான் குடும்பம்தான் மலையக மக்களுக்கு சேவை செய்தது என்றால் அஸீஸ், சி.வி.வேலுப்பிள்ளை போன்ற முன்னைய மலையகத் தலைவர்கள் சேவை செய்யவில்லையா? அவர்களும் மலையக மக்களின் நலன்களுக்காகப் பாடுபட்டவர்கள்தான். யாரும் சேவை செய்யவில்லை என்று கூறுவது சரியான வாதம் அல்ல.

இ.தொ.காவில் இருந்த எமது தலைவர் சந்திரசேகரன் பிரிந்து வந்து, தனிக்கட்சியொன்றை ஆரம்பித்து பலம்வாய்ந்த மலையக அரசியல்வாதியாகவும், மலையக மக்களின் சிறந்த தலைவராகவும் உயர்ந்துள்ளார்.

ஆறுமுகம தொண்டமான் லட்சக்கணக்கான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றவர் என்று இவர்கள் கூறிக்கொள்வதற்கு எம்தலைவர் சந்திரசேகரனே ஒருமுழுக்காரணியாக அமைந்தவர் - என்றார்.

### ஜெகதீஸ்வரன்

இ.தொ.காவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகதீஸ்வரன் கூறியதாவது:-

மலையக மக்களின் வாழ்க்கை பெரும்பான்மை மக்களோடு இரண்டறக் கலந்த வாழ்க்கை. இதுவே எங்கள் ஐயா காட்டியவழியுமாகும். வடக்கு - கிழக்கு ஒரு தனிப்பகுதி. அவர்கள் ஓர் அமைப்பாக இருக்கிறார்கள். அவர்களோடு நாங்கள் இணைவதைத் தலைவர் விரும்பவில்லை. அவ்வாறு விரும்பியிருந்தால் இன்றைக்கு மலையகம் அழிந்திருக்கும்.

அவர்களது அரசியல் வேறு, எங்களது அரசியல் வேறு. எனினும், அவர்களுடைய போராட்டத்தை நாங்கள் மதிக்கிறோம். அவர்களின் அரசியலை நாங்கள் விமர்சனம் செய்யவில்லை.

ஆனால், எங்கள் தலைவருக்கு ஞானோதயம் இல்லை. கிஞ்சித்தும் அரசியல் ஆற்றல் இல்லை என்று கூறுவது ஏற்றுக்கொள்ளமுடியாது.

சமாதானம் ஏற்பட வேண்டும். பேச்சுகள் ஆரம்பிக்கப்படவேண்டும். ஒரு பலமில்லாத அரசினால் இதனைச் செய்வது இயலாத காரியம். எதைக் கேட்டாலும் பலமில்லை என்ற பலவீனத்தைச் சுட்டிக்காட்டுவார்கள். எனவே, ஒரு பலமில்லாத அரசை பலமானதாக்கி சமாதான முன்னெடுப்புகளை நகர்த்துவதே எங்கள் இணைவிற்கான பிரதான காரணம்.

ஜே.வி.பி.இடைக்கால நிர்வாகசபை யோசனையை எதிர்ப்பதாகக் கூறினாலும் ஜனாதிபதி அந்த யோசனையை முன்வைத்தே விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டும் என்கிறார்.

ஐ.தே.கட்சியே அரசுக்கு ஆதரவு வழங்கத் தயாராகவிருப்பதாக தெரிவித்திருக்கிறது. எனவே, எங்களுடைய சக்தி ஏன் சும்மா வீணாக வேண்டும்?

இந்த அரசு எதையுமே செய்யாது, எவற்றையுமே தராது என்று சொல்கின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் 22 பேரும் ஏன் அரசிடம் சமாதானத்தைக் கொண்டு வாருங்கள். சமாதானத்தைக் கொண்டு வாருங்கள் என்று கெஞ்சவேண்டும்?

எங்கள் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சக்தியையும் வீண்செல்லவிடாமல், அதனைப் பிரயோசனமாகப் பயன்படுத்தியிருக்கிறோம் - என்றார்.

### ரங்கா கேள்வி

இந்நிகழ்வின் இணைப்பாளராக அதை ஒழுங்குபடுத்திய ரங்கா, வடக்கு - கிழக்கு விவகாரத்தை மலையகத்தோடு ஒப்பிட்டு சில கேள்விகளை எழுப்பினார்.

யுத்தம் புரிந்து வடக்கு - கிழக்குப் போரினால் அழிவுற்றுள்ளது. புத்திசாதுரியமாக நடந்ததால் மலையகம் அழியாமல் தப்பிப்பிழைத்துள்ளது என்ற சாரப்படக் கருத்து வெளியிட்ட இ.தொ.காவின் எம்.பிக்களிடம், உரிமைகளுக்காகச் சண்டைபோடாமல் நீங்கள் சாதித்தது என்ன என்ற தொனியில் இணைப்பாளரின் கேள்வி அமைந்தது.

"மலையத்தில பல சேவைகளைப் புரிந்துள்ளதாகக் கூறும் இ.தொ.கா., ஏன் நுவரெலியாவில் ஒரு தமிழ்த் தேசியப் பாடசாலையை அமைக்கவில்லை? அதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை? யாழ்ப்பாணத்தில் மிகப்பெரும் இரு தேசியப் பாடசாலைகள் உட்படப் பல தேசியப் பாடசாலைகள் உள்ளன. அதில் படித்தவர்கள் பலர் பல முக்கிய பதவிகளில் உள்ளனர். மலையக இதயமென வர்ணிக்கப்படும் நுவரெலியாவில் ஏன் ஒரு தேசியப் பாடசாலை இல்லை?" என இணைப்பாளர் ரங்கா கேட்டார்.

அதற்கு வடிவேல் சுரேஷ் எம்.பி. பதிலளிக்கையில் புசல்லாவ தமிழ் மகா வித்தியாலயம் உள்ளதைச் சுட்டிக்காட்டினார்.

ஆனால், அது தேசியப் பாடசாலை இல்லை என்பதை ரங்கா ஞாபகமூட்டினார்.

### தொடர்ந்து சுரேஷ் கூறுகையில்:

1988ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் கல்வியில் மலையகம் வளர்ச்சிகண்டுள்ளது. அதுவும் தொண்டமானின் முயற்சிகளினால்தான் இதொ.கா. மலையகத்தில் பல சாவல்களை எதிர்கொண்டு மக்களின் வாழ்க்கை நிலையைப் படிப்படியாக உயர்வடையச் செய்துள்ளது.

மலையக மக்களின் உரிமைக்காகப் போராடி வந்த இ.தொ.கா., கல்வி வளர்ச்சியில் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி வந்தது.

ஆசிரியர் பற்றாக்குறை தொடக்கம் பாடசாலைக் கட்டட வசதிகள் முற்றாக இல்லாமை போன்ற பிரச்சினை வரைக்கும் பல சவால்கள் இருந்தன.

இவையனைத்தையும் முறியடித்த நாங்கள மலையக மக்களுக்குச் சிறந்த முறையில் கல்வி கிடைக்கும் வழிகளை அமைத்துக் கொடுத்துள்ளோம்.

எங்களால் இயலுமான அளவுக்கு மலைய மக்களுக்குக் கல்வி கிடைக்க வழிசெய்துள்ளோம்.

இன்றும் கூரைகள் கூட இல்லாமல் வடக்கில் - கிழக்கில் பாடசாலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. மரத்திற்கு அடியிலும், வெளிப் பிரதேசங்களிலும் மாணவர்கள் அமர்ந்து தமது கல்வியைப் பெற்றுக்கொள்கின்றனர். ஆசிரியப் பற்றாக்குறை வடக்கு - கிழக்கில் அதிகமாக உள்ளது.

வடக்கு - கிழக்குப் பாடசாலைகளின் நிலைகளைத் தொலைக்காட்சிகள் அடிக்கடி படம் பிடித்துக் காட்டிவருகின்றன. அப்பிரதேசப் பாடசாலைகள் மிக மோசமாகப் போய்விட்டன.

ஆனால், உங்களுடைய வீட்டுக்குள் எததனையோ ஓட்டைகளை வைத்துக்கொண்டு அதில் ஒரு பிரச்சினையாவது தீர்க்காமல் மலையகக் கல்வி குறித்துப் பேசுகிறீர்கள். மலையகக் கல்வி நடவடிக்கைகளைத் தாளில் எழுதிவந்து பேசுவதைவிட உங்கள் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முயலவும்.

உங்கள் வீட்டுப் பிரச்சினையை அங்கே வைத்துவிட்டு, இங்கே வந்து எமது மக்களின் பிரச்சினையில் ஏன் மூக்கை நுழைக்கிறார் ஈழவேந்தன் எம்.பி. இவருக்கு மலையகத்தில் எங்கேயாவது தேசியப்பட்டியல் கொடுத்தார்களா? இல்லை. வடக்கு - கிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த எம்.பி. பதவி கொடுத்தார்களா? - என்றார் வடிவேல் சுரேஷ் எம்.பி.

கிழக்கில் ஒரு பல்கலைக்கழகம் இருக்கத்தக்கதாக தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஒன்றை முஸ்லிம் மக்களுக்காக அமரர் அஷ்ரப் பெற்றுக்கொடுத்ததைச் சுட்டிக்காட்டிய இணைப்பாளர் ரங்கா, காலங்காலமாக அரசுடன் இணைந்திருந்த இ.தொ.கா. கல்வியியற் கல்லூரி ஒன்று அமைத்தது பற்றித்தான் பேசுகிறது. மலையக மக்களுக்குப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்கவாவது முயற்சி எடுத்ததா என்ற சாரப்படவும் வினாவெழுப்பிச் சுட்டிக் காட்டினார்.

யுத்தம் புரிந்த வடக்கும் - கிழக்கும் யுத்தத்துக்கு மத்தியில் தனது தனித்துவத்தைப் பேணுவதற்கு எடுத்த முயற்சிகள், ஆளும் தரப்புடன் இணைந்திருந்த மலையகத்தின் சார்பில் எடுக்கப்பட்டதா என்ற சாரப்படக் கேள்வியும் முன்வைக்கப்பட்டது.

பின்னர், ஈழவேந்தனின் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தை நகைப்பாகக் கூறிய வடிவேல் சுரேஷ் எம்.பிக்கு ரங்கா பதிலடி கொடுக்கும் வகையில்:

"உங்கள் செல்லச்சாமி தேசியப் பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்தானே? தேர்தலில் நேரடியாகப் போட்டியிட்டு வென்ற நீங்கள (வடிவேல் சுரேஷ், ஜெகதீஸ்வரன் எம்.பி. போன்றோர்) இருக்கத்தக்கதாக இப்போது பிரதி அமைச்சர் பதவியை நீங்கள் செல்லச்சாமிக்கு வழங்கவில்லையா? எனவே, சிறந்த தலைவர்கள் பலர் தேசியப் பட்டியல் மூலமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தேசியப் பட்டியல் நியமனத்தை நீங்கள் குறைத்து மதிப்பிடக்கூடாது - என்றார்.

பேராசிரியர் பீரிஸ், திலக் மாரப்பன போன்றோர் தேசியப் பட்டியல் மூலமாகவே எம்.பியாகினர் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். ★

---

# முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க கொழும்பு நீதிமன்றத்தில் செவ்வாய் ஆஜரானார்

கொழும்பு,செப்.16

வர்த்தக, வாணிப நுகர்வோர் விவகார அமைச்சில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி சம்பந்தமான விசாரணை தொடர்பாக அந்த அமைச்சுக்குப் பொறுப்பாகவிருந்த முன்னாள் அமைச்சரும், ஐ.தே.கட்சியின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க நேற்றுமுன்தினம் கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் ஆஜரானார்.

குறித்த அமைச்சில் இருந்து சில ஆவணங்கள் பெறப்பட்டிருந்தன. அவற்றில் உள்ள கையொப்பம் ரவி கருணாநாயக்கவினுடையவையா என ஊர்ஜிதம் செய்ய வேண்டியிருந்தமைக்காகவே அவர் மன்றுக்கு வந்திருந்தார்.

மன்றில் பொலீஸ் பிரிவின் பாதுகாப்பிலேயே இந்த ஆவணங்கள் உள்ளன. அவை முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கும் அமைச்சின் அப்போதைய செயலாளரான திருமதி ஹர்ஷா விக்கிரமசிங்கவிற்கும் காண்பிக்கப்பட்டன.

கையொப்ப ஊர்ஜிதத்திற்கு நீதிவான் பொலீஸாருக்கு அனுமதி வழங்கியிருந்தார்.

வழக்கு நவம்பர் எட்டாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினம் ரவி கருணாநாயக்கவும் திருமதி ஹர்ஷா விக்கிரமசிங்கவும் கோட்டை மன்றில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

(க)

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை(நேற்றையது)

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் புதன்கிழமை, செப்-15-2004

| சந்தைப்புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1,432.63 | 1,430.25 | 2.38 | 0.17 |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2,129.07 | 2,124.98 | 4.09 | 0.19 |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) ASTRI - அனைத்துப் பங்குகள் | 1,482.20 | 1,479.74 | 2.46 | 0.17 |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2,211.[illegible]7 | 2,207.42 | 4.25 | 0.19 |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 377.7 | 613.9 | (236.20) | ([illegible].49) |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 18.2 | 16.2 | 2.00 | 12.35 |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 4,552 | 4,242 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 352.1 | 351.5 | | |

# ஏ.ரி 402 ரக விதைநெல் இன்றி விவசாயிகள் பெரும் ஏமாற்றம்

வலிதெற்கு,செப்.16

விவசாயிகள் பலர் இம்முறை பெரும்போக விதைப்புக்கெனக் கோரியிருந்த ஏ.ரி.402 ரக விதைநெல்லைக் கமத்தொழில் திணைக்களத்தினர் தருவித்து வழங்கத் தவறியதால் விவசாயிகள் பலர் ஏமாற்றமடைந்துள்ளனர்.

ஏற்கனவே பலவிவசாயிகள் கமநல சேவை நிலையங்களூடாக இந்த நெல்லைப் பெற்றுத் தருமாறு கோரி இருந்தபோதும் கமத்தொழில் திணைக்களம் ஏ.ரி 402 இற்குப் பதிலாக ஏ.ரி 353 இன விதைநெல்லையே கொள்வனவு செய்து வழங்க முடியும் எனத் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் பல விவசாயிகள் மேற்படி ரக விதை நெல்லைப் பெற்றுத் தருமாறு கோரியிருந்தனர் எனவும் அதற்கான முற்பணத்தைக் கூடச் செலுத்தி இருந்தனர் எனவும் திணைக்களத்தால் நெல கொண்டு வரப்பட்ட போது பல விவசாயிகள் அவற்றைப் பெற்றுக் கொள்ளாமல் முற்பணத்தைக் கூடத் திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டனர் எனவும் கமத்தொழில திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால், தாம் பெரும் நஷ்டமடைய வேண்டி ஏற்பட்டதாகவும் எனவே, இம்முறை விவசாயிகள் கோரிய அவ்விதை நெல்லைக் கொண்டுவந்து வழங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் ஏ.ரி 353 ரக விதை நெல் கோரியவர்களுக்கு மட்டும் அதனை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஆனால், விவசாயிகள் தாம் கோரிய விதைநெல்லை விதைப்புக் காலத்துக்கு முன்பாகத் திணைக்களம் வழங்கத் தவறியமையால் தாம் வேறு விதை நெல்லை வாங்கி விதைத்து விட்டதாகவும் நெல்லை நேரகாலத்துடன் பெற்றுத்தர திணைக்களம நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (10-152)


## சிறப்பு இசைக் கச்சேரி

நல்லூர் முருகன் ஆலய வைரவர் உற்சவ தினமான
இன்று (16.09.2004) மாலை 6.30 மணி முதல்
நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில்
துர்க்கா மணி மண்டபத்தில்
பிரபல பாடகர்
பொன்.சுந்தரலிங்கம் அவர்களின் சகோதரர்
**பொன்.சுபாஸ்சந்திரனின்**
இசைக்கச்சேரி பக்கவாத்திய சகிதம் இடம்பெறும்.
அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

*விளம்பர அனுசரணை*
**மகாராணி பட்டுச் சோலை**
(C/37677)(42-21-17)


# இந்தியாவிலிருந்து நாடுதிரும்பிய அகதிகளுக்கு உதவித்திட்டம்

யாழ்ப்பாணம்,செப்.16

புலம்பெயர் தொடர்பான சர்வதேச அமைப்பு (ஐ.ஒ.எம்.) இந்தியாவில் இருந்து கடந்த ஏப்ரல 15 ஆம் திகதிக்கு முன்னர் நாடு திரும்பியவர்களுக்கு பல்வேறு வகையான உதவித் திட்டங்களை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

இந்த உதவி குறிப்பாக அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் உதவியுடன் விமானம் மூலமாகவும் படகுகள் மூலமாகவும் தாயகம் திரும்பியோருக்கே வழங்கப்பட்டுள்ளது. இதற்கென விவரங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கையின்னை அந்த நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

கிராமங்களுக்கான போக்குவரத்து வசதி, உணவுப் பொருள்களற்ற அத்தியாவசிய நிவாரணப் பொருள்கள் வழங்கல், இலவச மருத்துவ பரிசோதனை உதவி மற்றும் உள நல ஆலோசனை வழங்கல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக நெல் மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கைக்கான உதவி, மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, மேசன், தச்சுவேலைகளை மேற்கொள்வதற்கான உபகரணங்களையும் இதர வசதிகளையும் செய்து கொடுத்தல், தொழில் வாய்ப்புக்கான தொடர்புகளை ஏற்படுத்தல், தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்கல், முழுச் சமூகமும் பயன்பெறும் வகையில் விவசாயக் கிணறு, முன்பள்ளி, விற்பனை நிலையம், சமூக நிலையம் மற்றும் அரிசி ஆலை ஆகியவற்றை அமைத்துக் கொடுப்பது போன்ற உதவிகளை இந்த அமைப்பு வழங்கவுள்ளது.

பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள புலம் பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பின் (ஐ.ஓ.எம்.) கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (8-5)

## பரு.பிரதேச சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் விரைவில்

வடமராட்சி,செப்.16

மந்திகைச் சந்தைக்கு முன்பாக ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களைத் தவிர்க்கும் பொருட்டு, சந்தைக்கு முன்பாக பருத்தித்துறை பிரதேச சபையினால் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது.

சந்தை கூடும் வேளையில், மரக்கறிச்சந்தை, மீன்சந்தை, இறைச்சிக்கடைகளுக்கு வரும் பொதுமக்கள் சந்தையின் முன்புறத்தில் வீதியின் இருமருங்கிலும் சைக்கிள்களைக் கண்டபடி நிறுத்துவதால் வாகனப்போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சல்கள் ஏற்படுவதுடன், விபத்துக்கள் ஏற்படவும் காரணமாகிறது.

இவற்றைக் கருத்திற்கொண்டு சந்தைக்கு முன்புறமாகவுள்ள காணி ஒன்றில் பொதுமக்களுக்காக சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்றைப் பருத்தித்துறை பிரதேசசபை ஏற்படுத்திவருகிறது. (10-173)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 612 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 14-09-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4937632-4953767 |

வெற்றி இலக்கங்கள்
**41 42 43 53**

லக்கினம் இடபம்

ஜக்பொட் பரிசு ரூபா.48,66,950/- வெல்லப்பட்டுள்ளது

இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,60,797 | 10/- | 36,07,970/- |
| 2.இலக்கங்கள் | 33,167 | 20/- | 6,63,340/- |
| 1.இல + லக்கினம் | 32,725 | 30/- | 9,81,750/- |
| 2.இல + லக்கினம் | 3,002 | 100/- | 3,00,200/- |
| 3.இலக்கங்கள் | 864 | 500/- | 4,32,000/- |
| 3.இல + லக்கினம் | 91 | 5,000/- | 4,55,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | 01 | 48,66,950/- | 48,66,950/- |
| மொத்தம் | 4,30,656 | - | 1,28,37,460/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 1,28,37,460/-

தொடர் இல. 5912549 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 17ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4943618-2-22
4942877-4-54
4946042-2-50
4941775-7-75
4939867-2-75


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
1963 - 03 - 29



உதிர்வு
2004 - 08 - 17

அமரர் **இராமநாதன் நாகராசா**

*17.08.2004 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*யாவல் வீதி,*
*ஆனைக்கோட்டை.* (36452)(42-21-17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


## சமையலுக்கு ஆள் தேவை

Eastern, Western, Chinese உணவு சமைக்க அனுபவம் உள்ள ஒருவருடன் உணவு பரிமாறுபவரும (Steward) தேவை.
நேரில் வரவும்.

40, கண்டி வீதி,
சுண்டுக்குளி
(36451) (21-17)


## கண்ணீர் அஞ்சலி

**செல்வன் பெனில்டஸ் ஜோன்சன் விதூஷனன்**

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ரஞ்சினி பெனில்டஸ் அவர்களின் புதல்வன் செல்வன் விதூஷனன் 15.09.2004இல் இறைவனடி சேர்ந்தமையை அறிந்து மிகுந்த அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது பெற்றோர், உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்

யா/திருக்குடும்ப கன்னியர்மடம்
யாழ்ப்பாணம். (36455)(21-17)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கணக்காளராக கடமையாற்றும்
திரு.செ.மனோகரன அவர்களின் அன்புத் தந்தையார்

**அம்பலவாணர் செல்லையா**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரது பிரிவால் வருந்திநிற்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கி ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலகம், நல்லூர்.* (C-37676) (38-21-17)

நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



13-09-2004 அன்று கொழும்பில்
காலமான (காலஞ்சென்றவர்களான)
எலியாஸ் ஞானம்மா
தம்பதியினரின் மகன்

**எலியாஸ் ஜெயராஜா**

(பிரபல கட்டட ஒப்பந்தகாரரும்,
செமி ஹாட்வெயார் உரிமையாளரும்)

அவர்களின் மறைவினால் துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*2/1, மருதடி ஒழுங்கை,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (36450)(21-17)

நெல்சன் திரேசா
(கனி) (U.K)
(சகோதரி).

பருத்தித்துறை வைத்தியசாலைக்கு

# மக்வூட்ஸ் மருந்துகள் நிறுவனத்தினால் ஒரு தொகுதி மருந்து உள்ளீர்க்கும் கருவிகள்

வடமராட்சி,செப்.16

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் ஆஸ்துமா நோயாளிகளுக்கு ஒரு தொகுதி மருந்து உள்ளீர்க்கும் கருவிகளை இலங்கையில் மருந்துப் பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனங்களில் ஒன்றான மக்வூட்ஸ் நிறுவனம் வழங்கியுள்ளது.

மருந்துகளுடன் கூடிய உள்ளீர்க்கும் கருவிகள் (இன்கேலர்) முதற்கட்டமாக கிளினிக்குகளில் சிகிச்சை பெற்றுவரும் ஆஸ்துமா நோயாளிகள் 135 பேருக்கு வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் சி.கதிரைவேற்பிள்ளையினால் வழங்கப்பட்டன.

அடுத்த கட்டமாக இந்நிறுவனம் வழங்கும் மருந்து உள்ளீர்க்கும் கருவிகள் (இன்கேலர்) கிளினிக்குகளில் சிகிச்சை பெற்றுவருவோரில், இக்கருவிகளைப் பெற்றுக் கொள்ளாதோருக்கும், வைத்தியசாலை விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் ஆஸ்துமா நோயாளிகளுக்கும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், இந்நிறுவனம் இவ்வைத்திய சாலை விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வரும் மனநோயாளர்களுக்குத் தேவையான மருந்து வகைகளில் ஒரு தொகுதியை அன்பளிப்பாக வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-173)

# நல்லூர், கோப்பாய் கோட்ட மாணவர்களுக்கு விவசாய அறிவுப் போட்டிகள் அடுத்தமாதம்

யாழ்ப்பாணம்,செப்.16

நல்லூர் மற்றும் கோப்பாய் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான விவசாய அறிவுப் போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் முதற் கட்டமாகப் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்டு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் முதல் 5 இடங்களைப் பெறும் மாணவர்கள் கோட்ட மட்டப்போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

தரம் 10, 11 ஆகியவற்றில் கல்வி கற்கும் மாணவர்கள் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்.

அடுத்தமாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள நல்லூர்க் கோட்டப் பாடசாலை மாணவர்களை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறும் -

கோப்பாய்க் கோட்ட மாணவர்களை காலை 9.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவகல்லூரிக்குச் சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (10-13)




தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் ஆதரவில் இயங்கும் 'தமிழொலி' மாணவர் மன்றத்தின் 13ஆவது ஆண்டு நிறைவு விழாவில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

முன்னாள் கரவெட்டி உதவிப் பிரதேச செயலர் இ.சிவபுண்ணியம், புலோலி பிரதேச சபையின் பிரதம நூலகர் எஸ்.திருச்செல்வம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (10-15)




## தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வெளி இணைப்பு இயந்திரங்கள்

யாழ்ப்பாணம்,செப்.16

வேலணை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அங்கத்துவ சங்கங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 25 பயனாளிகளுக்குப் படகுகளுக்கான வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்த பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம், வேலணை, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களிலுள்ள கடற்றொழில் சமாசங்களுக்கு மீன்பிடி வள்ளங்களில் பாவிப்பதற்கான ஐஸ்பெட்டிகள், தலா 100 வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் திட்டத்தின் கீழ் இவை நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (10-7-20)

# வலுவிழந்த பதினைந்து பேருக்கு சக்கரநாற்காலிகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,செப்.16

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்டப்பிரிவின் ஏற்பாட்டில் வலுவிழந்த 15பேருக்கு சக்கரநாற்காலிகள் வழங்கும் வைபவம் கடந்த திங்கட்கிழமை நல்லை ஆதீன மண்டபத்தில் இடம் பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் டாக்டர் வை.தியாகராஜா, யாழ். பல்கலைக் கழக வணிகத்துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கயல்விழி ஆகியோர் மங்களவிளக்கினை ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரை மற்றும் சிறப்புரைகள் இடம் பெற்றன. டாக்டர் வை.தியாகராஜா, வி.ஸ்ரீசக்திவேல், பேராசிரியர் க.தேவராஜா, அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் கயல்விழி ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

சங்கீதபூசணம் பொன்.சுபாஸ்சந்திரனின் இன்னிசைக் கச்சேரியும் இடம் பெற்றது. (10-201)

# சாட்டி சித்தாத்திரை மாதா திருவிழா நாளை மறுதினம்

யாழ்ப்பாணம்,செப்.16

சாட்டி, புனித சித்தாத்திரை அன்னை தேவாலயத் திருவிழா நாளைமறுதினம் 18ஆம் திகதி சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் நவநாள்கள் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனை யும் மறுநாள் சனிக்கிழமை காலை 6 மணிக்கு முதற்திருப்பலியும் காலை 8.30 மணிக்கு யாழ், ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் திருவிழாத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

தொடர்ந்து திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

மேற்படி திருநாளை முன்னிட்டு பக்தர்களின் வசதிகருதி யாழ்.பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து பிரயாணத்திற்கான விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

திருவிழாவைத் தொடர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் மேற்படி தேவாலயத்தில் மாலை 4 மணிக்கு செபமாலை, திருப்பலி, நற்கருணை ஆசீர் மற்றும் நோயாளிகளை ஆசீர்வதித்தல் ஆகியன இடம்பெறவுள்ளன.

அத்துடன், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் 9.30 மணிக்கு திருப்பலியும் நண்பகல் 12 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் வழிபாடுகளும் இடம்பெறும். (4-201)

# விவசாயிகளுக்குப் பயிற்சி வகுப்புகள்

வலிதெற்கு,செப்.16

திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் 'நிகொட்' நிறுவனத்தினரால் விவசாயிகளுக்கென தொடர்ச்சியான பயிற்சி வகுப்புகள் தற்போது நடத்தப்பட்டுவருகின்றன.

பயிர்ச்செய்கை முக்கியத்துவம், தாவரத் தெரிவு, பராமரித்தல், கத்தரித்தல், பீடைத் தாக்கம், அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம், பழமரச்செய்கை போன்ற பல்வேறு துறைகளில் மூன்று நாள்களுக்கு தொடர்பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

நவம்பர் மாதம் வரை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இப்பயிற்சித் திட்டத்தின்கீழ் உடுவில் கமநலசேவை நிலையத்துக்குட்பட்ட விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 20, 21, 22 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் காலை 9மணி முதல் மாலை 4மணிவரை நடைபெறும் இப்பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றும் விவசாயிகளுக்கு இரவு நேரத்தில் தொலைக்காட்சி மூலம் செய்முறை விளக்கப் படங்களும் காண்பிக்கப்பட்டுவருகின்றன.

ஒவ்வொரு பயிற்சி வகுப்பிலும் 40 விவசாயிகள் கலந்துகொள்கின்றனர்.

இம்முறை நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்பில் புன்னாலைக்கட்டுவன் தெற்கு (10 விவசாயிகள்), தாவடி (5 விவசாயிகள்), குப்பிளான் (5விவசாயிகள்), சுன்னாகம் (3விவசாயிகள்), உடுவில் வடக்கு (ஒரு விவசாயி உட்படப் பல விவசாய சம்மேளனங்களைச் சேர்ந்த 40 விவசாயிகள் பங்குபற்றுவதற்கெனப் பெயர்களை பதிவுசெய்துள்ளனர். (10-152)

# ஒழுங்கையைப் புனரமைத்துத் தருமாறு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.16

மாகியப்பிட்டி, நொங்குத்துறை ஒழுங்கையை மழைக்காலத்திற்கு முன்னர் புனரமைப்புச் செய்து தருமாறு மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மானிப்பாய் பிரதேச சபையைக் கோரியுள்ளார்.

நொங்குத்துறை ஒழுங்கை கடந்த 6மாதத்திற்கு முன்னர் சிரமதானம் மூலம் பிரதேசசபை ஊழியர்களால் துப்புரவு செய்யப்பட்டிருந்தது.

தற்போது போக்குவரத்திற்கும், மழைநீர் வடிந்து செல்வதற்கும் ஏற்றவாறு இல்லாதுள்ளது.

எனவே, மழைக்காலத்திற்கு முன்னர் நொங்குத்துறை ஒழுங்கையைச் சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்து உதவுமாறு மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஐ.மார்க்கண்டன் கேட்டுள்ளார். (10-185)

## பயிற்சி நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,செப்.16

மின்இணைப்பு மற்றும் ஆண்கள் பெண்களுக்கான தையல் பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 19ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக் கூடியவாறு "ஜே.ஆர்.எஸ் தொழிற்பயிற்சி நிறுவனம், புனித அல்போன்ஸ் லிகோரியார் ஆலயம், கச்சாய் வீதி, சாவகச்சேரி" என்னும் முகவரிககு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதியன்று மேற்படி தொழிற்பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (10-201)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.16

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளையும், நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இக்கூட்டம் இடம்பெறும்.

இதில் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செயற்பட வேண்டிய வேலைத் திட்டம் 'நீர்ப், நிகொட், கார்ப்' திட்டங்களும் ஆராயப்பட்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவுள்ளது.

மேலும், சர்வதேச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி ஒதுக்கீடு தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (4-185)

## கற்றல் உபகரணங்கள்

வலி.தெற்கு,செப்.16

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் உள்ள ஆரம்பப் பிரிவு மாணவர்களின் ஆரம்ப விஞ்ஞானப் பாடத் தேவைகளுக்கென இவ்வருடம் கணித, விஞ்ஞான உபகரணங்கள் வலிகாமம் கல்வி வலயத்தினரால் வழங்கப்படவுள்ளன.

வலிகாமம் வலய கணித, விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்களால் தற்போது கனிஷ்ட, இடைநிலை பாடசாலை மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான கற்றல் உபகரணங்கள் பாடசாலை அதிபர்களிடம் வழங்கப்பட்டு வருகின்றன.

இவை வழங்கப்பட்டு முடிவடைந்தவுடன் ஆரம்பப் பிரிவுக்கான உபகரணங்கள் வழங்கப்படும் என விஞ்ஞான பாட உதவிக் கல்விப பணிப்பாளர் எஸ்.விஜேந்திரசர்மா தெரிவித்தார். (10-152)

## கண்ணிவெடி அபாயக் கல்வி பயிற்சிப்பட்டறை

வலி.தெற்கு,செப்.16

கிராமமட்டத் தொண்டர்களுக்கான கண்ணிவெடி அபாயக் கல்விப் பயிற்சிப் பட்டறை ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வோதயம் அமைப்பு இப்பயிற்சிப் பட்டறைக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (10-152)

## உதவுதொகை வழங்கல்

யாழ்ப்பாணம்,செப்.16

கடல் உயிரின வளத் தொழில்நுட்ப பாட ஆசிரியர்களுக்கான உதவுதொகை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்டக் கல்வி மேம்பாட்டு பேரவைக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. (10-201)

## புதிய கட்டடத் திறப்பு விழா

குடத்தனை,செப்.16

அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மாடிக் கட்டடத் திறப்பு விழா இன்று வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் பொ.சிவராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கலந்துகொண்டு நாடா வெட்டி மாடிக் கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார். (10-78)

## நவோதயா வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.16

'நவோதயா' திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள மீசாலைவீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் கடந்த 6ஆம் திகதிமுதல் 10ஆம் திகதிவரை நவோதயா வார நிகழ்வுகள் நடைபெற்றன.

வித்தியாலய அதிபர் கு.சிவானந்தம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச பிரமுகர்கள் ஆகியோரின் கருத்துரைகள்,மாணவர்களது கலைநிழ்வுகள், கல்விக் கண்காட்சி மற்றும் சிரமதானம் ஆகியன இடம்பெற்றன. (10-201)

## பாரதி விழா

குடத்தனை,செப்.16

குடத்தனை தென்னிந்தியத் திருச்சபை கல்விவளாக உயர்தர மாணவர் மன்றத்தினால் நடத்தப்படும் பாரதிவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்விவளாக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்விவளாக உயர்தர மாணவர் மன்றத் தலைவி கீர்த்தனா கந்தசபேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கலைநிகழ்வுகள்,பட்டிமன்றம், சொற்போர் ஆகியன நடைபெறவுள்ளன. (10-78)























தென்னிலங்கை ஊடகங்களைச் சேர்ந்த பிரதேச செய்தியாளர்கள் 50 பேர் அடங்கிய குழுவினர் முதல்முறையாக யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தனர். இவர்கள் நேற்று 'உதயன்' அலுவலகத்துக்கு விஜயம்செய்து ஆசிரியபீட உறுப்பினர்களுடன் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாண மக்களினது கருத்துக்களையும் இங்குள்ள நிலைமைகளையும் நேரில் அறிந்து கொள்வதற்காக இவர்கள் இங்கு வருகைதந்தனர்.

கொழும்பில் உள்ள பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கான பிராந்தியச் செய்தியாளர்கள் இக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் தொலைக்காட்சி ஊடகங்களைச் சேர்ந்தோரும் இவர்களில் அடங்குவர்.

தேசிய சமாதானப் பேரவையின் ஊடகத்துறை இயக்குநர் கலாநிதி ஜெஹான் பெரேரா, தேசிய சமாதான சபையின் தேசிய இணைப்பாளர் எஸ்.பி.நாதன் ஆகியோர் தலைமையில் வந்த இக் குழுவினரை 'உதயன்' பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் வரவேற்று உரையாற்றுவதை முதலா வது வரிசையில் காணலாம். எஸ்.பி.நாதன் உரையை மொழிபெயர்க்கிறார்.

இரண்டாம், மூன்றாம் வரிசைகளில் தென்னிலங்கையைச் சேர்ந்த செய்தியாளர்கள் 'உதயன்' மண்டபத்தில் வீற்றிருந்து எடுத்துக்கொண்ட படங்களைக் காணலாம்.

தென்னிலங்கைச் செய்தியாளர்களின் வருகையையொட்டி 'உதயன்' அலுவலகத்திற்கு விசேட விருந்தினர்களாக வந்திருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகப் பயிற்சிநிலைய இணைப் பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் ஒப்பிலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் இரா.மோகன், அவரது துணைவியார் நிர்மலா மோகன் ஆகியோர் 'உதயன்' நிறுவன நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன், பிரதம ஆசிரியர் சகிதம் சேர்ந்து எடுத்துக்கொண்ட படத்தை நான்காவது வரிசையில் காணலாம்.

*(படங்கள்: அலுவலகச் செய்தியாளர்)*

# ஈராக்கில் பொலீஸ் வாகனம்மீது தாக்கு: 11 அதிகாரிகள் அவ்விடத்திலேயே பலி!

பக்பா,செப்.16

ஈராக்கின் பக்பா நகரில் சென்றுகொண்டிருந்த பொலீஸ் வாகனம் மீது தீவிரவாதிகள் சரமாரியாகச் சுட்டதில் 11பொலீஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். வாகனத்தை ஓட்டிச்சென்ற சாரதியும் இதில் உயிரிழந்தார்.

இத்தாக்குதலில் பலியானவர்கள் அனைவரும் ஈரானின் எல்லை நகரான கானாக்கினைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சி நடவடிக்கைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்கள் மீதே தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இரு கார்களில் வந்த தீவிரவாதிகள் பலர் பொலீஸார் சென்றுகொண்டிருந்த வானகத்தின் மீது திடீரெனத் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் பக்தாத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள ஹைபா வீதியில் இருக்கின்ற சந்தைப்பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை 80 பேரை அண்மித்துள்ளது.

மற்றோர் இடத்தில் அல்கெய்டா அமைப்பினருடன் அமெரிக்க இராணுவத்தினர் நடத்திய தாக்குதலின்போது பொலீஸ் அதிகாரிகள் உட்பட 26பேர் பலியானார்கள் என்று ஒரு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதனிடையே, பெய்ஜி எனும் பகுதியில் உள்ள எண்ணெய் விநியோகம் செய்யும் குழாயைத் தீவிரவாதிகள் குண்டுவைத்துத் தகர்த்துள்ளனர். இதனால், அப்பகுதி முழுவதும் புகைமூட்டமாகக் காட்சியளிக்கிறது. (ஐ-க)

# ஈராக்கின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கே முக்கியத்துவம் அளிக்கவேண்டிய நிர்ப்பந்தம்

## புனரமைப்பைக் கவனிக்க முடியவில்லையென அதிகாரிகள் கவலை

பக்தாத்,செப்.16

ஈராக்கின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென பெருந்தொகைப் பணத்தை அமெரிக்க காங்கிரஸ் ஒதுக்கீடு செய்திருந்த போதிலும், தினமும் அங்கு இடம்பெறும் தாக்குதல்களில் அதிக எண்ணிக்கையானவர்கள் படுகொலை செய்யப்படுவதனால் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக வெளிவிவகாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய ஈராக்கின் பாதுகாப்பு, எண்ணெய் உற்பத்தி, அந்நாட்டவர்களுக்கான வேலை வாய்ப்பு ஆகிய நடவடிக்கைகளில் 340 கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும்.

ஈராக்கை முற்றிலும் புனரமைக்கவென சென்ற நவம்பர் மாதத்தில் அமெரிக்கக் காங்கிரஸ் ஒதுக்கீடுசெய்த 1840 கோடி டொலர்களில் இருந்து இந்தப்பணம் பெற்றுக்கொள்ளப்படவிருக்கிறது.

பாதுகாப்புத் தொடர்பான விடயத்தில் 16 புதிய எல்லைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளும், மேலதிக 20 ஈராக் தேசிய பாதுகாப்பு அணிகளும் உருவாக்கப்படவிருக்கின்றன.

இதற்கிடையில் - ஈராக்கில் இரண்டு ஆஸ்திரேலியர்கள் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர் என்று வெளியான தகவலையடுத்து அங்கு தங்கியுள்ள ஆஸ்திரேலியர்களின் நிலைமை பற்றி ஆராயவென விசேட அதிகாரிகள் குழுவொன்றை அந்நாட்டு அரசு பக்தாத்திற்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்தக் குழுவினர் ஆஸ்திரேலியாவிலிருந்து நேற்றுமுன்தினம் புறப்பட்டுச் சென்றனர். இக்குழுவில் 30இற்கும் அதிகமான விசேட அதிரடிப்படையினர் இடம்பெற்றுள்ளனர் என்று செய்திப்பத்திரிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

## சுற்றுலா தொடர்பான கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக 2ஆம் வருட வணிகத்துறை மாணவர்களின் கவனத்திற்கு:-

எதிர்வரும் திங்கட்கிழமை (20.09.2004) சுற்றுலா செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதால், அது தொடர்பான கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை (17.09.2004) காலை 9.00 மணிக்கு நடைபெறும். அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

(36464)(43-11-12) - 2 ஆம் வருட பிரதிநிதி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 24 † 04 † 1925 — மறைவு 17 † 08 † 2004

### விசுவலிங்கம் நடராசா

(ஓய்வு பெற்ற விவசாய உத்தியோகத்தர்)
151,திருமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

மனிதரில் மாணிக்கமாய், மாந்தருள் திலகமாய்
புனிதமாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்த
உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 16.09.2004 எமதில்லத்தில் நடைபெறும் நினைவு நாள் நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தற்காலிக முகவரி:*
*288,ஜெயந்திநகர்,*
*கிளிநொச்சி.*

தகவல்: குடும்பத்தினர்.
(C/37687)(43-11-12)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி வி.உதயச்சந்திரா
அவர்களின் பாசமிகு தந்தையார்

### கந்தையா வைரமுத்து

அவர்களின் மறைவையிட்டு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*யா/ஆவரங்கால் நடராசா.*
*இராமலிங்கம் வித்தியாலயம், புத்தூர்.*

- ஆசிரியர்கழகம்.
(C/37685)(43-11-12)

## மரண அறிவித்தல்கள்

### Dr.K.சதாசிவம்

(புலோலியூர் க.சதாசிவம்)

புற்றளை, புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும், 42nd Lane, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட, ஓய்வுபெற்ற பதிவு வைத்திய அதிகாரியும், எழுத்தாளருமான Dr.K.சதாசிவம் நேற்று (15.09.2004) புதன்கிழமை அதிகாலை இறைபதமெய்தினார்.

அன்னார் கந்தையா - உமையாத்தை தம்பதிகளின் அன்பு மகனும் திருமதி இலட்சுமிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற அசிரியை) அன்புக் கணவரும் Dr.கலையழகன், திருமதி அ.கலைவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.ச.அருட்செல்வன், Dr.க.குமுதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அ.கீர்த்திராஜ், அ.ஸ்வேதிகா ஆகியோரின் பாசத்திற்குரிய பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 16.09.2004 மாலை 5.00 மணியளவில் 2B,ஜெயரட்ண மலர்ச்சாலை, பொரளையில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*24,2/2, மிலேனியம் சீகல்வில்லா,*
*42nd Lane,வெள்ளவத்தை.*
(C.37687)(43-11-12)

தகவல்:
Dr.கலையழகன் (மகன்),
T.P.:0112553732

### செல்லையா பஞ்சாட்சரம்



சாவகச்சேரி, பெரியமாவடியைச் சேர்ந்த செல்லையா பஞ்சாட்சரம் கடந்த 11.09.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான செல்லையா- தங்கம்மா ஆகியோரின் அன்பு மகனும் செ.சடாட்சரத்தின் அன்புத் தம்பியும் ப.பரமேஸ்வரன் (சுவிஸ்), ப.சுகுமார் (லண்டன்), ப.உதயகுமார் (கனடா), திருமதி சி.ரேணுகாதேவி, திருமதி சி.கீதா (கனடா), ப.ஜெயக்குமார், திருமதி ந.கவிதா, ப.சுரேஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி ப.ஈஸ்வரி, திருமதி சு.ரதிதேவி (லண்டன்), திருமதி உ.புஸ்பராணி (கனடா), த.சின்னத்தம்பி, சோ.சிவநேசன் (கனடா), திருமதி கே.அனித்தா (கண்ணா), பொ.நந்தன் ஆகியோரின் மாமனாரும் ப.சொரூபா, பநிருபா, சு.கோகுலன், சு.கஜனி, உ.பிரேமியா, உ.பிரேம்நாத், சி.ஜமுனா, சி.கீதன், சி.நிரூசன், ந.திவ்வியா, சி.மிலன், கெ.கேதுஸ்சன் ஆகியோரின் பேரனும் ச.மார்க்கண்டு (ஆசிரியர்), ச.மகேந்திரன் (ஜேர்மனி), ச.மகேஸ்வரன் (இந்தியா), ச.சந்திரன், ச.பாஸ்கரன் (சுவிஸ்), திருமதி ச.திலோத்தமி (ஜேர்மனி), ச.ஈஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2004) வியாழக் கிழமை மாலை 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத் திற்கு புகழுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உப்புக்கேணி வீதி,*
*பெரியமாவடி,*
*சாவகச்சேரி.*
(36461)(43-11-12)

தகவல்:
ப.ஜெயக்குமார் (மகன்),
பொ.நந்தன், த.சின்னத்தம்பி
(மருமக்கள்).

## மாவை கொல்லங்கலட்டி பிள்ளையார் கோயில் விநாயக சதுர்த்தி திருவிழா

18.09.2004 சனிக்கிழமை நண்பகல் விநாயக சதுர்த்தி திருவிழா விஷேட அபிஷேக, ஆராதனைகளுடன் நடைபெறும்.

அன்று திருப்பணிச்சபை அமைக் கப்படும்.

பகல் அன்னதானம் நடைபெறும். காலை 9 மணிக்குத் தெல்லிப்பழை தடை முகாமுக்குவரவும் கோயிலுக்கு அழைத்துச் செல்லப்படும்.

(36465) - அறங்காவலர்.

## தவறிவிட்டது

புஸ்பராசா உதயகுமார் என்பவரது அடையாள அட்டை (இல-691250733V) இம்மாதம் 10ஆம் திகதி முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிற்றி காட்வெயார் ஸ்ரோர், 55,57, ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கிக்கு முன்பாக ஒப்படைக்கவும் அல்லது 222-2901 எனும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். சகுந்த சன்மானம் வழங்கப்படும். (36457)

## குழுப்படம் எடுத்தல்

யாழ்.பல்கலைக்கழக தமிழ் சிறப்புக்கலை இறுதி வருட மாணவர்களுக்கான குழுப்படம், இன்று (16.09.2004) வியாழக்கிழமை பிப4.30 மணிக்கு இராமநாதன் மண்டபத்திற்கு முன்னால் எடுக்கப்படவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் சமுகம் தருமாறு வேண்டுகின்றேன்.

இறுதிவருடப் பிரதிநிதி,
தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம். (364559)

## ஆள் தேவை

மானிப்பாய் வீதி, ஆறுகால் மடத்தில் இயங்கும் இரும்புக் கடைக்கு ஆள் தேவை. லான்மாஸ்டர் ஓடக்கூடியவராக இருத்தல் வேண்டும். வயதானவர்களும் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
கீதா ரேடர்
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.
(36462) தொலைபேசி: 4590186

## தெய்வீக இசையரங்கு

நல்லைக் கந்தன் வைரவ சாந்தி விழாவை முன்னிட்டு ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று (16.09.2004) வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு)

### இசைக்கச்சேரி

| | |
|---|---|
| பாட்டு: | திரு.பொன்.சுபாஸ்சந்திரன் |
| ஒகன்: | திரு.M.கண்ணன் |
| வயலின்: | திரு.A.ஜெயராமன் |
| மிருதங்கம்: | திரு.S.மகேந்திரன் |
| முகர்சிங்: | செல்வன் S.விமல்சாங்கர் |
| தபேலா: | செல்வன் K. சுதர்சன் |

நல்லூர். (36456)(21-12-11-43) - இளங்கலைஞர் மன்றத்தினர்.


லக்சுமி இணுவில்



தனுஸ், சாயாசிங், கருணாஸ் மற்றும் பலர் நடிப்பில்
திருடா திருடி
காட்சிநேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்

தனுஷ், சிந்துநுலானி, கருணாஸ், மணிவண்ணன், நடிப்பில்
சுள்ளான்



காட்சிநேரம்: 11.00,3.00, 7.00 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த



நிர்மலா சங்கானை



MBBS
11.00, 2.45, 6.00
Return to tow moon junction


## யா/புனித ஜோண் பொஸ்கோவின் இதய அஞ்சலி



முதலாம் ஆண்டில் கல்விபயிலும்
எமது அன்பு மாணவன்

### செல்வன் விதூசணன் பெனில்டஸ்

அவர்கள் அகால மரணமடைந்த
செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த
கவலையும் அடையும் இவ்வேளையில்
அவரின் குடும்பத்தினரின் ஆற்றொணாத்
துயரில் நாமும் பங்குகொண்டு அவரின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-37683) (26-11-12-43)

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.**

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் J.B விதூஷணன்

(தரம் -1 மாணவன், யா/ஜோண் பொஸ்கோ பாடசாலை)



யா/ஜோண் பொஸ்கோ பாடசாலை தரம்-1 மாணவனும், பெனில்டஸ் ஜோண்சன் (ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி), ரஞ்சினி (ஆசிரியை, யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம்) ஆகியோரின் அன்பு மகனும் நிருஷணனின் (மாணவன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை) அன்புச் சகோதரனுமான J.B.விதூஷணன் நேற்று (15.09.2004) புதன்கிழமை அகால மரணமானார்

அன்னார் மரியதாசன், இருதயபுஷ்பா, காலஞ்சென்ற கணேசு (ஓய்வுபெற்ற அதிபர்,யாழ் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் தமிழ் வித்தியாலயம்), லலிதாம்பாள் (ஓய்வபெற்ற ஆசிரியை), பஸ்தியாம்பிள்ளை (அதிபர்,யாழ்.காசிப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனும் சுபாசினி, சர்வேஸ்வரன், டெனிஸ்ரன் ஆகியோரின் பெறாமகனும் ஸ்ரீரஞ்சன், வதனி, பமிலா, றெமி, டல்சினி, விஜயரட்ணம், விஜி ஆகியோரின் மருமகனும் நிஷா, அபிஷேக் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சங்கவி, அச்சுதன், ஜெய்சன், டானியா, ஆகாஷ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2004) வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

*கலைமணி வீதி,*
*கட்டைப்பிராய்,*
*யாழ்ப்பாணம்.*
(C.37687)(43-11-12)

தகவல்: பெ.ஜோண்சன் (ஆசிரியர்).

### ஐயா வேலுப்பிள்ளை



கரணவாய் மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயா வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று (15.09.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் திரும்தி பத்தினிப்பிள்ளையின் அன்புக் கணவரும் சி.ஞானேஸ்வரி, வே.செல்வச்சந்திரன் (சுவிஸ்), கு.யோகேஸ்வரி(சுவிஸ்), வே.சுவேந்திரன் (சுவிஸ்), செ.சோதிமலர் (சிங்கப்பூர்), வே.பிரபாகரன் (ஜனசக்தி இன்சூரன்ஸ் கம்பனி முகவர்), வே.பிரபா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இ.சிவகுமார் (ஸ்ரீலங்கா ரெலிக்கொம்), செ.தசாயினி (சுவிஸ்), க.குணசிங்கம் (சுவிஸ்), க.செந்தில்நாதன் (பொறியியலாளர் சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் துவாரகன் (ஹாட்லிக் கல்லூரி), அனுதர்ஷன் (ஹாட்லிக் கல்லூரி), கபிலாஷன் (ஹாட்லிக் கல்லூரி), அஜந்தன், மருஷன், ஷர்மிலா (சுவிஸ்), மீரா (சுவிஸ்), ஆரணி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2004) வியாழக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.*
(C/37684)(43-11-12)

தகவல்:
வே.பிரபாகரன்
(மகன்).

### திருமதி முருகேசு சிவபாக்கியம்



வேலணை கிழக்கைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு சிவபாக்கியம் நேற்று (15.09.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-கடுக்கம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லர் முருகேசுவின் அன்பு மனைவியும் மதுரேஸ்வரி, இராஜேஸ்வரி (ரதி), இராஜேஸ்வரன் (U.K), யோகேஸ்வரன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும் தருமலிங்கம் (கணக்காளர்), கமலராணி (ஜேர்மனி), மங்கையர் செல்வம் (U.K) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கோமதி, லோஜன், தர்சினி, நிலானி, நிருஜன், நிவேதா, நிவேஸ், ஜெகன், சுகந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜெதுசனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*4ஆம் வட்டாரம்,*
*வேலணை கிழக்கு,*
*வேலணை.*
(36463)(43-11-12)

தகவல்:
திரு.தருமலிங்கம்
(மருமகன்).

### திருமதி சிங்காரம் சின்னம்மா

தன்னை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிங்காரம் சின்னம்மா நேற்று (15.09.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2004) வியாழக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*களபூமி,*
*காரைநகர்.*
(36460)(43-11-12)

தகவல்: பா.சரஸ்வதி (மகள்).

# ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் 21 ஆம் திகதி ஜனாதிபதி உரை

ஜனாதிபதி குமாரதுங்க எதிர்வரும் 21 ஆம் திகதி ஐ.நா.பொதுச்சபையில் உரையாற்றவுள்ளார். ஐ.நாவின் 59 ஆவது பொதுச்சபைக் கூடடம் அமெரிக்கத் தலைநகர் நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது. அதில் கலந்துகொள்ளும் ஜனாதிபதி மூன்றாவது தடவையாக ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றவுள்ளார். 1995, 2000 ஆம் ஆண்டுகளில் அவர் ஏற்கனவே ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றியுள்ளார்

ஐ.நா தலைமையக வளாகத்தில் நடைபெறவுள்ள பசி வறுமை என்பவற்றுக்கு எதிரான போராட்டம் என்ற கருத்தரங்கிலும் ஜனாதிபதி கலந்துகொள்வார் என்று ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக நாடுகளின் தலைவர்கள் இந்தக் கருத்தரங்கில் பங்குகொள்வர்.

நியூயோர்க்கில் தங்கியிருக்கும் முக்கிய தலைவர்கள் சிலரைச் சந்தித்துப் பேச்சுநடத்தவும் ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டுள்ளார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி பேர்வேஷ் முஷாரப், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜப்பானியப் பிரதமர் ஜுன்ஷிரோ கொய்சுமி உட்படப் பல தலைவர்களை அவர் சந்தித்துப் பேசுவார் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

நியூயோர்க்கில் தங்கி இருக்கையில் "சச்சரவுத் தீர்ப்பும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கை பெற்ற பாடங்கள்" என்ற தலைப்பில் ஆசிய சமூகத்துக்கு ஜனாதிபதி உரையாற்றவுள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றிய பின்னர் அவர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசுவதற்கும் திட்டமிட்டுள்ளளார்.

## தமிழ்ச்செல்வனுடனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் சந்தித்தார்.

அதன்பின் யாழ். அரசசார்பற்ற அமைப்புகளின் இணையப் பிரதிநிதிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

பின்னர் யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகவியலாளர்களுடன் அவர் கலந்துரையாடினார். ஆனால், சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமைகுறித்து அப்போது கருத்துக்கூற அவர் மறுத்துவிட்டார்.

"விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று (வியாழக்கிழமை) காலை சந்திக்கவிருக்கின்றேன். இன்று இரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேசவிருக்கின்றேன்.

"சமாதான முயற்சிகளின் அடுத்த கட்டம் குறித்து அவர்கள்தான் தகவல்களை வெளியிட வேண்டும். நாம் தகவல்களை வெளியிடமுடியாது.

"சமாதான முயற்சிகளின் ஓர் அங்கமாக யாழ். மக்களின் நிலைமை, அவர்களின் அன்றாடப் பிரச்சினைகள் ஆகியவை தொடர்பாக ஆராயவே இங்கு வந்தோம். சமாதான முயற்சிகள் மீள ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதே தற்போதுள்ள விடயம். அது நிறைவேறும் போது யாழ். மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் - என்றார்.

யாழ்ப்பாணத்தில் கண்காணிப்புக் குழுவினருடனும் சொல்ஹெய்ம் பேச்சு நடத்தினார்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 பாதையூடாகக் கிளிநொச்சி செல்லும் சொல்ஹெய்ம் இன்று தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்துவார்.

(எ-க-3-6-7)


சக்தி கல்வி நிலையம் - சுன்னாகம்
A/L DAY CLASS
தமிழ்
பா.பத்மநாதன் B.A (Hons)
ஆரம்பம் - 18.09.2004
Sat.,Sun. - 6.00 - 7.00 (a.m.) (36448)(30)



விக்னா
கல்வி நிறுவனம்
A/L 2005 DAY CLASS
பொருளியல்
திரு. K.உதயன்
பகுதி - II
Mon., Wed., Fri., சந்தைச் சமநிலை 7.15 - 8.15
Sat., Sun., PAPER CLASS 9.30 - 10.30
பகுதி - II
Sat., Sun., பணம் 10.30 - 11.30
ஆரம்பம் - 18.09.2004 (சி-37681)


## எந்தச் சவாலையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியான அணுகுமுறை மூலமே இதற்குத் தீர்வு காணமுடியும் என்று ஆணித்தரமாகக் கூறி வைக்க விரும்புகின்றேன்.

அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்படும் தீர்வுத்திட்டத்தை மேலும் வலுப்படுத்த நாம் அரசுக்கு உறுதுணையாக இருப்போம்.

2001ஆம் ஆண்டு நான் கடற்படைத் தளபதியாகப் பதவியேற்ற சமயமே யுத்தம் செய்வதன மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது என பதை உறுதிபடக் கூறியிருந்தேன். எனவே, அரசியல் ரீதியான தீர்வைக் காண்பதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வரவேண்டும். தற போது அமுலில் இருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் சீர்குலைந்துவிடக்கூடாது என்பதில் நாம மிகவும் கவனமாக இருக்கின்றோம் - என்றார்.

திருகோணமலைத் துறைமுகப் பகுதி ஆரம்பகாலம் தொடக்கமே புலிகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது. அதை இல்லை என்று கூறிவிடமுடியாது. ஆனால், எந்தச் சவாலையும் எதிர்கொள்ள நமது படைகள் முழுமையாகத் தயாராக இருக்கின்றன என்று உறுதி கூறவிரும்புகின்றேன்.

எந்தச் சவாலையும் எதிர்கொள்ள எமது படைகளுக்குத் தாக்குதல் திறமையும் வேண்டும். அதை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்துவருகின்றோம். பொருளாதார நெருக்கடி காரணமாக ஒரு பலம்வாய்ந்த படைக் கட்டமைப்பை விருத்தி செய்வது கஷ்டமாகவுள்ளது.

இந்தியக் கடற்படைத் தளபதியின் இலங்கை விஜயம் நல்ல - வரவேற்கத்தக்க - ஒன்று.

இரண்டு நாடுகளினதும் கடற்படைகளும் பரஸ்பரம் ஒத்துழைத்து, புரிந்துணர்வுடன் செயற்பட்டுவருகின்றன. அதனை மேலும் வலுப்படுத்த இப்போது வாய்ப்புக் கிடைத்துள்ளது.

பல கூட்டு நடவடிக்கைகளுக்கு நாம் இணக்கம் கண்டுள்ளோம்.

இந்தியாவிலிருந்து - ஹெலி இறங்கிச் செல்லக்கூடிய - கரையோர ரோந்துக் கப்பல் ஒன்றை எற்கனவே வாங்கியிருந்தோம்.

அவற்றுக்கான ஹெலிக்கொப்டர்கள் இன்னும் வந்துசேரவில்லை என்பது உண்மையே.

இத்தொடரில் இன்னொரு கப்பலையும் வாங்கவுள்ளோம்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த சமயம் இதற்கான இணக்கம் இந்தியத் தரப்புக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியக் கடன் வழித்திட்டம் (Credit Line) மூலம் இந்தக் கப்பல் பெறப்படுகின்றது. இப்படி அவர் கூறினார். (எ-க)


புதுக்கடை திறப்புவிழா
தமிழ்த் தாரண வருடம் ஆவணி மாதம் 31ஆம் நாள் வியாழக்கிழமை (16.09.2004) 9.10 - 10.00 மணி வரையான (ப.நே.) துலாலக்கினமும் சித்த யோகமும் கூடிய சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட
வீடியோ சிற்றி & மியூசிக் வேல்ட்
Vedio City & Music World
எனும் ஸ்தாபனம் திறந்துவைக்கப்படுகின்றது என்பதை நண்பர்கள், பாவனையாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.
உரிமையாளர் -
வீடியோ சிற்றி & மியூசிக் வேல்ட்.
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
Main Street, Pandaththarippu.
(சி-37675)(30)



324, Palaly Road, Jaffna. ➤ கருத்தரங்கு
யாழ் நகரில்! Networking
Microsoft Certified System Engineer
நிறுவனத்தின் சர்வதேச தர சான்றிதழ்
MCP MCSA MCSE
◈ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
◈ Microsoft நிறுவன அதிபர் Bill Gates வழங்கும் சான்றிதழ்
◈ Network Manager, System Administrator தொழில் வாய்ப்புக்கள்
◈ சான்றிதழ் மூலம் வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
நீங்களும் குறுகிய காலத்தில் சர்வதேச தர கணனி விற்பன்னராகலாம்.
விபரங்கள் MCSE
காலம்: 18-09-2004 சனி காலை 10 மணி
கருத்தரங்கிற்கான அனுமதி இலவசம் MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project


# பிரதமர் - சொல்ஹெய்ம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணம் காட்டி, இதனால் சொல்ஹெய்முடனான சந்திப்புக்கு வரமுடியாதிருப்பதால் அதை ரத்துச செய்யும்படி நோர்வேத் தூதரகத்துக்கு அறிவிககும்படியும் -

பிரதமர் கொழும்புக்கு வெளியே (பெரும்பாலும் குருநாகலுக்கு அல்லது வேறு இடத்துக்கு) புறப்பட்டுச் செல்வதற்குத் தயாராக ஹெலிக்கொப்டர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் -

நேற்றுமுன்தினம் காலையில் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து பிரதமருக்குக் தகவல் பறந்ததாகத் தெரிகின்றது.

எனினும், சொல்ஹெய்ம் போன்ற இராஜதந்திரப் பிரமுகர் ஒருவரைச் சந்திப்பதற்கு முற்கூட்டியே நேரம் ஒதுக்கிக்கொடுத்துவிட்டு கடைசி நேரத்தில் அதை ரத்துச் செய்வதற்கான பொறுப்பைத் தாம் ஏற்கமுடியாது எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மறுத்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

ஆனாலும், ஜனாதிபதியின் நடவடிக்கை காரணமாக மேற்படி சொல்ஹெய்முடனான சந்திப்புக்கு ஒதுக்கிக்கொடுத்த நேரத்தைத் தம்மால் பேண முடியாமல் போய்விட்டது எனத தெரிவிப்பதற்குப் பிரதமர் இணங்கினார் என்றும் -

சந்திப்பு இரத்தாவதற்கான பொறுப்பை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டால் சரி என்ற சாரப்படப் பிரதமர் தரப்பிலிருந்து பதில் தெரிவிக்கப் பட்டதாக அறியவந்தது.

இதனை அடுத்து, சொல்ஹெய்ம் - பிரதமர் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு நடக்க இருந்த அதேநேரத்துக்கு ஜனாதிபதி மாளிகைக்கு வரும்படி பிரதமருக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டது.

இதையடுத்து - -

அமைச்சுப் பொறுப்புக்களை மாற்றியமைப்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அன்றையதினம் - அந்நேரத்தில் - பிரதமருடன் ஆலோசனை நடத்தினார் எனவும் -

அதனால் எரிக்சொல்ஹெய்முடனான பிரதமரின் சந்திப்பு இடம்பெறவில்லை எனவும் -

ஊடகங்களுக்குச் செய்திகள் கசிய விடப்பட்டன.

சொல்ஹெய்முடனான உத்தியோகபூர்வச் சந்திப்பு இரத்தானாலும் கூட, தனிப்பட்ட முறையில் சொல்ஹெய்மைச் சந்திக்க விரும்பிய பிரதமர், தனிப்பட்ட பிரதிநிதி ஒருவர் மூலம் அதற்கான ஏற்பாட்டைச் செய்தார் எனவும் -

அன்று பின்னிரவில் - காதும் காதும் வைததால் போல் - கொழும்பில் இரகசியமான ஓரிடத்தில் - சொல்ஹெய்முக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது எனவும் - அறியவந்தது.

அன்று பகல் உத்தியோகபூர்வ சந்திப்பு இரத்தானதின் பின்னணியைப் பின்னிரவுச் சந்திப்பின்போது பிரதமர் ராஜபக்ஷ, சொல்ஹெய்முக்கு நேரில் விளக்கினார் என்றும் - அறியவந்தது.

ஆனால் -

விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சொல்ஹெய்ம் சந்திக்க முன்னர் அவரைச் சந்திப்பதைத் தவிர்க்கும்படியே பிரதமர் ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார் என ஜனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-க)


விக்னா கல்வி நிறுவனத்தின்
வெள்ளிவிழாவையொட்டி நடைபெற்ற
அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்
பின்வருமாறு:
முதலாவது பரிசு இல:2105
2ஆவது பரிசு இல:2718
3ஆவது பரிசு இல:4787
இப்பரிசில்கள் வெள்ளிவிழா வைபவத்தின் போது வழங்கப்படும்.
குறிப்பு: பரிசுக்கு உரியவர்கள் 10.10.2004இற்கு முன் கல்வி நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும். (C/37680)(42)



COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல.15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.
0777222422, 0777917781
50% OFF
நவீன தொழில்நுட்ப வளர்ச்சிப் பாதையில்........
Dip. In Video Editing
Dip. In Multimedia
Dip. In Networking
ஆரம்பம் 25ம் திகதி
(சி-37689)(30)


## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காமல கடந்த 11ஆம் திகதி சிறுமி உயிரிழந்தார்.

சிறுமியின் சடலத்தைப் பொறுப்பேற்பதற்காக பெற்றோர் கொழும்பு வைத்தியசாலைக்குச் சென்றனர்.

ஆனால், விபத்துக் காரணமாக மேற்படி சிறுமி உயிரிழந்தமையால் பொலீஸாரின்விபத்து அறிக்கை கிடைத்த பின்னரே சடலத்தை ஒப்படைக்க முடியும் என்று கொழும்பு வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள புதுக்குடியிருப்புப் பகுதிக்கு ஸ்ரீலங்காப் பொலீஸார் சென்று விபத்துக் குறித்த விசாரணைகளை நடத்துவது நடைமுறைச் சாத்தியமானது அல்ல என சுட்டிக காட்டப்படுகிறது. (எ-9-164)

## நிதித்துறையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற தொடக்க விழா நிகழ்வில் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கு நிதிப்பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் மலர்மாலை அணிவித்தார். ஆசியுரையினை வடக்கு - கிழக்கு மேம்பாட்டு நிறுவனத் தலைவர் தனபாலசிங்கமும் சிறப்புரையினை வெ.இளங்குமரனும் ஆற்றினர்.

இக்கல்லூரியில் 53 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான கல்விச் செலவுகள் அனைத்தும் நிதித்துறையாற் பொறுப்பேற்கப்படுவதுடன் மாணவர்களுக்கு உதவு தொகையாக மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. மேலும் பயிற்சி நிறைவில் இவர்களுக்குப் பணியமர்த்தம் வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-9)


விக்னா
கல்வி நிறுவனம்
இறுதிப் பிரிவு
O/L DAY CLASS
(PAPER CLASS)
ஆரம்பம் - 17.09.2004 (8.30 - 2.00)
(சி-3779)(30)



யாழ் நகரில் உங்கள் பயணத் தேவைகளை இலகுவாக்க


புத்தம் புதிய "Pride PJ 125 DELUXE" மோட்டார் சைக்கிள்கள்
அறிமுக விலை ரூ. 117,000 மட்டுமே
• ஜப்பானிய இயந்திரத்தைக் கொண்டது.
• "Self & Kick Start" வசதிகளைக் கொண்டது.
• சிக்கனமானது.
உங்கள் அதி நவீன "Pride PJ 125 DELUXE" மோட்டார் சைக்கிளை இப்போதே பெற்றுக் கொள்ளுங்கள்.
ஏகமுகவர்: Sky Electronic Systems
1C, Stanley Road,
Jaffna
அழையுங்கள் - 0777 305533


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.